# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

மானியக் கோரிக்கை எண். 18

**ஆர். காந்தி**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

### பொருளடக்கம்


| வ. எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1–81 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்" | 82–139 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 140–186 |
| 4 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 187–195 |

# பட்டுவளர்ச்சித் துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1 |
| 2 | பட்டுவளர்ப்பு | 7 |
| 3 | இந்தியாவில் பட்டுத் தொழில் | 16 |
| 4 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் | 18 |
| 5 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 22 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் | 29 |
| 7 | பயிர்க் காப்பீடு | 64 |
| 8 | 2021–2022–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் | 65 |
| 9 | தகவல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டிற்காக துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் புது நடவடிக்கைகள் | 77 |
| 10 | 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 81 |
| | புகைப்பட தொகுப்பு | i–vii |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 82 |
| 2 | முக்கிய நோக்கங்கள் | 83 |
| 3 | நிர்வாக அமைப்பு | 84 |
| 4 | நிலையான வளர்ச்சி இலக்குகள் (SustainableDevelopment Goals) | 85 |
| 5 | சந்தை செயல்பாடுகள் | 92 |
| 6 | கண்காட்சிகள் | 94 |
| 7 | ஏற்றுமதி விற்பனை | 98 |
| 8 | விற்பனை அளவு | 98 |
| 9 | விலைக்கொள்கை | 99 |
| 10 | சிறப்புத் திட்டங்கள் | 100 |
| 11 | வியாபார நிறுவனங்களுடன் வணிக மேம்பாடு | 101 |
| 12 | மின் வணிகம் | 101 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 13 | பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் | 102 |
| 14 | புதிய நிர்வாகம், சந்தை மற்றும் உற்பத்தி முயற்சிகள் | 104 |
| 15 | விருப்ப கொள்முதல் முகமை | 114 |
| 16 | கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு | 115 |
| 17 | கைவினை கலைஞர்களுக்கான நலத் திட்டங்கள் | 117 |
| 18 | அறிவிப்புகள் | 135 |
| 19 | தொலைநோக்கு பார்வை | 139 |

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| | முன்னுரை | 140 |
| 1 | நோக்கங்கள் | 141 |
| 2 | நிருவாகம் | 142 |
| 3 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 142 |
| 4 | கதர் | 143 |
| 5 | வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA) | 157 |
| 6 | கிராமத் தொழில்கள் | 160 |
| 7 | கண்டனூர் கதர் வளாகம் புதுப்பித்தல் | 171 |
| 8 | வணிகம் | 172 |
| 9 | தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 179 |
| 10 | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 180 |
| 11 | கதர் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 182 |
| 12 | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 185 |

# தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

## அட்டவணை



| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | நோக்கங்கள் | 187 |
| 2 | நிருவாகம் | 187 |
| 3 | பதநீரை இறக்குவதற்கான உரிமம் | 188 |
| 4 | சிறப்பு திட்டங்கள் | 188 |
| 5 | வணிகம் | 191 |
| 6 | பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 195 |

# பட்டுவளர்ச்சித் துறை

வளம் மிகு இயற்கையானது நாம் உயிர்வாழ்வதற்கும், நல்ல வாழ்க்கைக்குமான பல்வேறு வளங்களை நமக்கு வழங்கி வருகிறது. அத்தகைய இயற்கையின் புதையலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு வசீகர வளமே பட்டு விவசாயம் ஆகும்.

தரமான பட்டு உற்பத்திக்காக பட்டுப்புழுக்களை வளர்க்கும் நடைமுறை தொழில்நுட்ப மொழியில் பட்டுவளர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. அறிவியல் சார்ந்த விவசாயமான 'பட்டு விவசாயமும்', ஆகச்சிறந்த கலையான 'நெசவுக் கலையும்' சங்கமிக்கும் தருவாயில், அளவுகடந்த எழில்மிகு 'பட்டு ஆடை' உருவாகிறது.

காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு, சேலம் வெண்பட்டு போன்ற பல்வேறு வகையான பட்டுத் துணிகளை உற்பத்தி செய்து வரும் தமிழ்நாடு, பட்டுவளர்ப்பில் பல நூற்றாண்டுகளாக ஒரு ஆழமான செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பட்டுத் துணிகளுக்கு புவிசார்க் குறியீடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

நவீன மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதில் தமிழக பட்டு விவசாயிகள் முன்னிலை வகிக்கின்றனர். மாநிலத்தில்

தரமான வெண்பட்டு (பைவோல்டின் பட்டு) உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பட்டுத்தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு தொழில்முனைவோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த 'பட்டுவளர்ச்சிப் பிரிவு', 1979 ஆம் ஆண்டு முதல் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி இயக்குநரகமாக செயல்படும் வகையில் மேம்படுத்தப்பட்டு. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

### 1.1 பட்டுவளர்ச்சித் துறையின் நோக்கங்கள்

- மல்பெரி சாகுபடிப் பரப்பினை அதிகரித்தல்
- கூடுதலான விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களை பட்டுத்தொழிலில் ஈடுபடச் செய்தல்
- பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்
- வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்குதல்
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை பட்டுப்புழு வளர்ப்பு / பட்டு நூற்பு தொழிலில் ஈடுபட

ஊக்குவித்து மேம்பட்ட சமூகப் பொருளாதார நிலையை அடையச் செய்தல்

பட்டுவளர்ச்சித் துறை இயக்ககம் தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

## 1.2 பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு

பட்டுவளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட, விரிவாக்க அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டுவளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 3 |
| 3 | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 4 | துணை இயக்குநர் | 9 |
| 5 | உதவி இயக்குநர் | 27 |
| 6 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 7 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 8 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 824 |
| 9 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 316 |
| | **மொத்தம்** | **1,427** |


## பட்டுவளர்ச்சித் துறையின் நிர்வாக அமைப்பு

| |
|---|
| மாண்புமிகு அமைச்சர். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை |
| அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை |
| இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| இணை இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| துணை இயக்குநர் (நிருவாகம்) |
| துணை இயக்குநர் (பட்டுக்கூட்டிற்கு முந்தைய செயல்பாடுகள்) |
| துணை இயக்குநர் (பட்டுக்கூட்டிற்கு பிந்தைய செயல்பாடுகள்) |
| துணை இயக்குநர் (திட்டம்) |
| கணக்கு அலுவலர் (நிதி) |
| கணக்கு அலுவலர் (தணிக்கை) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மண்டல இணை இயக்குநர் தருமபுரி | மண்டல இணை இயக்குநர் ஈரோடு | மண்டல துணை இயக்குநர் வேலூர் | மண்டல துணை இயக்குநர் திருச்சி | மண்டல துணை இயக்குநர் மதுரை | துணை இயக்குநர் விதை ஒருங்-கிணைப்பு ஓசூர் | துணை இயக்குநர் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம் ஓசூர் | துணை இயக்குநர் அண்ணா பட்டு பரிமாற்றகம் காஞ்சிபுரம் |
| உதவி இயக்குநர் ஓசூர் | உதவி இயக்குநர் சேலம் | உதவி இயக்குநர் வாணியம்பாடி | உதவி இயக்குநர் திருச்சி | உதவி இயக்குநர் திண்டுக்கல் | உதவி இயக்குநர் ஆவலப் பள்ளி | உதவி இயக்குநர் த.ப.ப.நி. ஓசூர் | உதவி இயக்குநர் காஞ்சிபுரம் |
| உதவி இயக்குநர் தேன்கனிக்-கோட்டை | உதவி இயக்குநர் கோயம்புத்தூர் | உதவி இயக்குநர் திருவண்ணா-மலை | உதவி இயக்குநர் நாமக்கல் | உதவி இயக்குநர் தேனி | உதவி இயக்குநர் கல்கொண்டப்பள்ளி | | |
| உதவி இயக்குநர் கிருஷ்ணகிரி | உதவி இயக்குநர் உடுமலைப்-பேட்டை | உதவி இயக்குநர் விழுப்புரம் | | உதவி இயக்குநர் தென்காசி | உதவி இயக்குநர் கோலட்டி | | |
| உதவி இயக்குநர் தருமபுரி | உதவி இயக்குநர் ஈரோடு | | | | | | |
| உதவி இயக்குநர் பென்னாகரம் | உதவி இயக்குநர் தாளவாடி | | | | | | |
| உதவி இயக்குநர் ஓசூர் (வித்தகம்) | உதவி இயக்குநர் மாதஹள்ளி | | | | | | |
| உதவி இயக்குநர் கிருஷ்ணகிரி (வித்தகம்) | உதவி இயக்குநர் குன்னூர் | | | | | | |

| |
|---|
| பட்டு ஆய்வாளர்கள் |
| உதவி பட்டு ஆய்வாளர்கள் |
| இளநிலை பட்டு ஆய்வாளர்கள் |

## 1.2 பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள்




பட்டுவளர்ச்சி செயல்வழி வரைபடம்

தமிழ்நாட்டில் பட்டுவளர்ப்புத் தொழிலை மேம்படுத்த பட்டுவளர்ச்சித் துறையானது கீழ்க்காணும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:

- உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல்.
- மேம்படுத்தப்பட்ட / நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதன் மூலம் உற்பத்தி செலவைக் குறைத்து தரமான பட்டுக்கூடுகள் மற்றும் தரமான பட்டுநூலின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு ஊக்கமளித்தல்.
- மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு போன்ற செயல்பாடுகளில் திறன் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்குதல்.
- தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்தல்.
- தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் மூலம் பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கான ஒழுங்குமுறை சந்தை வசதிகளை ஏற்படுத்துதல்.

- மாநிலத்தில் பட்டுவளர்ப்பின் முன்னேற்றத்திற்கான அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு முதன்மைத் திட்டங்களின் கீழ் திட்ட உதவிகள் வழங்குதல்.
- பட்டு விவசாயிகள், பட்டுக்கூட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய நிலைகளில் ஈடுபடும் தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் மானிய உதவி வழங்குதல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- அதிக தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் பட்டுக்கு நிகரான தரமான வெண்பட்டுநூல் உற்பத்தியினை அதிகரித்தல்.
- அதிக அளவில் பட்டுநூற்பு அலகுகள் மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவுவதன் மூலம் பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்துதல்.

## 2. பட்டுவளர்ப்பு

மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு ஆகியவை விவசாயம் சார்ந்த செயல்பாடுகளாகவும், பட்டுநூற்பு ஒரு தொழில்துறை சார்ந்த செயல்பாடாகவும் இருப்பதால், இது விவசாயம் சார்ந்த கிராமப்புற குடிசைத் தொழிலாகக்

கருதப்படுகிறது. மேலும், குறுகிய காலத்திலேயே பட்டுக்கூடுகளை அறுவடை செய்ய முடிவதால், ஆண்டு முழுவதும் பட்டுத்தொழிலினை மேற்கொள்ள இயலும். இது குறைந்த முதலீட்டில் அதிக வருமானத்தை தரவல்லது.

பட்டு வளர்ப்பு, கிராமப்புற மற்றும் கிராமம் சார்ந்த– நகர்ப்புற பகுதிகளில் உள்ள பெண்கள் உட்பட சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய கணிசமான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது, எனவே, இது கிராமப்புற கட்டமைப்புக்கு ஒரு நம்பிக்கைக்குரிய தொழிலாக விளங்குகிறது.

விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாரா செயல்பாடுகளை இயற்கையாகவே உள்ளடக்கி, அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திறன் கொண்டிருப்பதால், பட்டுத்தொழில், நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் பொருத்தமான வழிகளில் ஒன்றாக விளங்குகிறது.

பருத்தி, கரும்பு மற்றும் நிலக்கடலை போன்ற மற்ற பணப்பயிர்களை விட பட்டுப்புழுவளர்ப்பு அதிக வருமானத்தை தரவல்லது. பெரும்பாலான வேளாண் பணப்பயிர்கள் வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை மட்டுமே சாகுபடி செய்ய முடியும். ஆனால் பட்டுப்புழுவளர்ப்பினை வருடத்திற்கு குறைந்தது 5 முதல்

6 முறை மேற்கொள்ள முடியும். மல்பெரி நடவு செய்த 6 மாதங்களிலேயே பட்டுப்புழு வளர்ப்பைத் தொடங்கலாம். ஒருமுறை மல்பெரி பயிரிட்டால், அது 10 முதல் 15 ஆண்டுகள் வரை தொடர்ந்து மகசூல் தரக்கூடியது. எனவே, குறைந்தபட்ச நிலம் வைத்திருக்கும் விவசாயிகளும் பட்டுப்புழுவளர்ப்புத் தொழிலை வருடந்தோறும் மேற்கொண்டு சீரான இடைவெளிகளில் வருமானம் ஈட்ட முடியும்.

மாநில அளவிலும், தேசிய அளவிலும் வளர்ந்து வரும் உள்ளூர் நுகர்வுக்குத் தேவையான உள்நாட்டு பட்டினை உற்பத்தி செய்வதன் மூலம், அந்நியச் செலாவணியில் பெரும் சேமிப்பையும், பட்டுநூல் ஏற்றுமதி மூலம் பல ஆயிரம் கோடி வருவாயையும் ஈட்டித்தரும் தொழிலாக பட்டுத்தொழில் உள்ளது.

**மல்பெரி**

மல்பெரியானது வெவ்வேறு வேளாண்–காலநிலைகளிலும், பல்வேறு வகையான மண் வகைகளிலும் வளரும் திறன் கொண்ட ஒரு கடினமான வற்றாத மரம் ஆகும். ஆனால், வண்டல் மண் வகை முதல் களிமண் கலந்த வண்டல் மண்ணில் இதன் வளர்ச்சி சிறந்து காணப்படுகிறது. மல்பெரியானது மானாவரி மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய இரண்டு நிலைகளிலும் வளரக்கூடியது.



**மல்பெரி நாற்றுகள்**




**மல்பெரித் தோட்டம்**

பொதுவாக 40–45% நீர் தேங்கும் திறன் கொண்ட மண்ணில் நன்றாக வளரும் மல்பெரி செடி, பல வகையான

காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகளுடன் ஊடுபயிராக பயிரிட மிகவும் பொருத்தமானது மற்றும் அதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் தரக்கூடியது. உயர் விளைச்சல் தரும் வி1, எம்.ஆர்.2, எஸ் வரிசை மற்றும் ஜி.4 ஆகிய மல்பெரி இரகங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

## பட்டுப்புழு

வர்த்தக ரீதியிலாக பயன்படுத்தப்பட்டு வரும் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா என நான்கு வகையான பட்டுகள் நான்கு விதமான பட்டுப்புழுக்களின் மூலம் கிடைக்கின்றன. பட்டுப்புழுக்களின் உணவு தாவரங்களின் அடிப்படையில், அவை மல்பெரி மற்றும் மல்பெரி சாரா அல்லது வன்யா (வனம்) பட்டு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் மூகா பட்டு மதிப்புமிக்கதாகும். இது இந்தியாவின் அசாம் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.




**நான்கு வகையான பட்டுப்புழுக்கள் மற்றும் அதன் பட்டுக்கூடுகள்**

தென்மாநிலங்களில் ஆண்டுதோறும் மல்பெரி பட்டுப்புழு வளர்ப்பிற்கு ஏற்ற சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலவுகிறது. ஆகவே, தமிழ்நாடு விவசாயிகளால் மல்பெரி பட்டு விவசாயம் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது.



பட்டுப்புழுவளர்ப்பு மனை



தண்டு அறுவடை முறை பட்டுப்புழுவளர்ப்பு




**மல்பெரி பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி**

## பட்டு

பட்டின் பெருமையை எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லை. பட்டு மிகவும் நேர்த்தியான மற்றும் இயற்கையான துணிநூல் ஆகும். பட்டு இணையற்ற வசீகரம், இயற்கையான பளபளப்பு தன்மை மற்றும் சாயங்களுக்கான உள்ளார்ந்த திறன், அதிக உறிஞ்சும் தன்மை, குறைவான எடை, மென்தன்மை மற்றும் நீடித்த நிலைப்புத் தன்மை ஆகியவற்றிற்கு நன்கு அறியப்பட்டதாகும். இந்த தனித்துவமான அம்சங்களால், பட்டு 'ஆடைகளின் அரசி' என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.





**நான்கு வகையான பட்டு நூல் மற்றும் அதன் பட்டு ஆடைகள்**


சேலைகள், வேட்டிகள், ஆடைத் துணிகள், கழுத்து / தோளணித் துண்டுகள், ஆயத்த ஆடைகள், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், அறை அலங்காரத் துணிகள் போன்ற பல்வேறு பட்டுத் துணி வகைகள் பட்டு நூலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டு நூலை மற்ற நூல்களுடன் கலந்து கலப்பு வகைத் துணி இரகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### 3. இந்தியாவில் பட்டுத் தொழில்

மத்திய பட்டு வாரிய அறிக்கைப்படி, 2021–22ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2022 வரை) 31,526 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.




**இந்தியாவின் கச்சாப்பட்டு உற்பத்தி (பிப்ரவரி 2022 வரை)**




**மல்பெரி கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)**
**(பிப்ரவரி 2022 வரை)**

உலக அளவில், பட்டுத் துணிகளை அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது. கச்சாப் பட்டு உற்பத்தியை விட கச்சாப் பட்டுத் தேவை அதிகமாக உள்ளது.

தற்போது இந்தியாவின் கணக்கீடு செய்யப்பட்ட கச்சாப்பட்டுத் தேவை ஆண்டொன்றிற்கு 39,500 மெட்ரிக் டன் ஆகும். இதில் 31,526 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு கடந்த ஆண்டில் (பிப்ரவரி 2022 வரை) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கச்சாப்பட்டுத் தேவையினை பூர்த்தி செய்ய பிற நாடுகளிலிருந்து கச்சாப்பட்டு

இறக்குமதி செய்யப்படுகிறது. நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் பட்டு நூல் தேவையைப் பூர்த்தி செய்து, பட்டு நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு ஜவுளித்துறை அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசின் பட்டுவளர்ச்சித் துறை ஆகியன பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.


ஏப்ரல் 2021 முதல் சனவரி 2022 வரையில் இந்தியா 1,666.88 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டு மற்றும் பட்டு ஜவுளிகளை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

## 4. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்

இந்தியாவில் பாரம்பரியமாக பட்டுத்தொழில் மேற்கொண்டு வரும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, மல்பெரி வெண்பட்டு உற்பத்தியில் நாட்டில் இரண்டாம் இடம் வகிக்கிறது. இங்கு 49,699.65 ஏக்கர் பரப்பளவில் 25,083 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுப்புழுவளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது (01.04.2022 தேதியில்).

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், தென்காசி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டுவளர்ப்பு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் மிதமான அளவில் பட்டு வளர்ப்புத் தொழில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மல்பெரி நடவு செய்வதிலிருந்து, பட்டுக் கூடுகளை சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்து நிலைகளிலும் இத்துறையின் விரிவாக்கப் பணியாளர்கள், விவசாயிகளுக்கு எல்லா வகையான உதவிகளையும் அளித்து வருகின்றனர்.




கடந்த மூன்று ஆண்டுகளில் மல்பெரி விரிவாக்கம்

மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு


| வ. எண் | மாவட்டம் | 01.04.2022-ல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானாவாரி | மொத்தம் | |
| 1 | கிருஷ்ணகிரி | 7432.65 | | 7432.65 | 3770 |
| 2 | தருமபுரி | 4183.80 | | 4183.80 | 2589 |

| வ. எண் | மாவட்டம் | 01.04.2022–ல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானா வாரி | மொத்தம் | |
| 3 | சேலம் | 3692.80 | | 3692.80 | 2292 |
| 4 | ஈரோடு | 3867.96 | | 3867.96 | 1691 |
| 5 | கோயம்புத்தூர் | 3064.85 | | 3064.85 | 1359 |
| 6 | திருப்பூர் | 6231.29 | | 6231.29 | 2952 |
| 7 | நீலகிரி | 88.00 | | 88.00 | 61 |
| 8 | வேலூர் | 745.25 | | 745.25 | 316 |
| 9 | திருப்பத்தூர் | 1703.25 | 170.85 | 1874.10 | 1100 |
| 10 | இராணிப்பேட்டை | 608.75 | | 608.75 | 303 |
| 11 | காஞ்சிபுரம் | 19.50 | | 19.50 | 15 |
| 12 | செங்கல்பட்டு | 32.50 | | 32.50 | 15 |
| 13 | திருவள்ளூர் | 23.50 | | 23.50 | 13 |
| 14 | திருவண்ணாமலை | 1184.55 | 118.00 | 1302.55 | 729 |
| 15 | நாமக்கல் | 2432.00 | 58.15 | 2490.15 | 1322 |
| 16 | கரூர் | 419.00 | | 419.00 | 231 |
| 17 | திருச்சி | 974.05 | | 974.05 | 516 |
| 18 | பெரம்பலூர் | 192.40 | | 192.40 | 93 |
| 19 | அரியலூர் | 148.00 | | 148.00 | 74 |
| 20 | புதுக்கோட்டை | 543.00 | | 543.00 | 289 |
| 21 | திருவாரூர் | 195.50 | | 195.50 | 85 |
| 22 | தஞ்சாவூர் | 356.50 | | 356.50 | 170 |
| 23 | நாகப்பட்டினம் | 17.50 | | 17.50 | 11 |
| 24 | மயிலாடுதுறை | 46.00 | | 46.00 | 17 |
| 25 | விழுப்புரம் | 728.50 | | 728.50 | 375 |
| 26 | கள்ளக்குறிச்சி | 427.00 | | 427.00 | 243 |
| 27 | கடலூர் | 580.25 | | 580.25 | 270 |
| 28 | மதுரை | 546.00 | | 546.00 | 242 |
| 29 | தேனி | 2106.50 | | 2106.50 | 984 |
| 30 | விருதுநகர் | 574.00 | | 574.00 | 228 |
| 31 | இராமநாதபுரம் | 164.50 | | 164.50 | 80 |

| வ. எண் | மாவட்டம் | 01.04.2022-ல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானா வாரி | மொத்தம் | |
| 32 | சிவகங்கை | 394.20 | | 394.20 | 177 |
| 33 | திண்டுக்கல் | 3234.50 | | 3234.50 | 1417 |
| 34 | திருநெல்வேலி | 224.00 | | 224.00 | 102 |
| 35 | தென்காசி | 1667.50 | | 1667.50 | 715 |
| 36 | தூத்துக்குடி | 239.85 | | 239.85 | 99 |
| 37 | கன்னியாகுமரி | 263.25 | | 263.25 | 138 |
| | **மொத்தம்** | 49352.65 | 347.00 | 49699.65 | 25083 |

2022-2023 ஆம் ஆண்டில் கூடுதலாக 5,000 ஏக்கரில் மல்பெரி சாகுபடி மற்றும் 625.00 ஏக்கரில் மர மல்பெரி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் 2,373 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் இறக்குமதி செய்யப்படும் வெண்பட்டுக்கு மாற்றாக, தமிழ்நாடு 2,299 மெட்ரிக் டன் வெண்பட்டினை உற்பத்தி செய்து, மல்பெரி வெண்பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தேசிய அளவில் இரண்டாம் இடம் வகிக்கிறது.




**கடந்த மூன்று ஆண்டுகளில் கச்சாப்பட்டு உற்பத்தி**

மேலும், பட்டு நூற்பு உப பொருட்களை பல்வகைகளில் திறம்பட பயன்படுத்தி இலாபம் ஈட்டும் வகையில் நிரந்தரமான சந்தை வசதிகளை ஏற்படுத்த மாநில அரசு திட்டமிட்டு வருகிறது.

## 5. நிலையான வளர்ச்சி இலக்குகள்:

ஐக்கிய நாடுகளின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 தொடர் இலக்குகளை உள்ளடக்கிய 'உலக மாற்றத்திற்கான நிலையான நீடித்த வளர்ச்சி 2016-2030-க்கான நிகழ்ச்சி நிரல்' செப்டம்பர் 2015 இல் இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த

இலக்குகள் சமுதாயத்தின் நலனுக்கான பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நல்வாழ்வின் அம்சங்களை தழுவியுள்ளது.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே வறுமையிலிருந்து விடுபட்ட, மிக வளமான மற்றும் முற்போக்கான மாநிலமாக ஆக்குவதுடன், அதன் மக்கள் ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் அடைந்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கையை உலகத்தின் பிற பகுதிகளுடன் இயைந்து வாழ வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டம் ஆகும்.

விவசாய அடிப்படையிலான உழைப்பு மிகுந்த மற்றும் வணிகரீதியாக கவர்ச்சிகரமான பொருளாதார செயல்பாடான பட்டு வளர்ப்பு, குடிசை மற்றும் சிறு தொழிலுக்குள் வரையறுக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற ஏழை எளிய மக்கள் மற்றும் பெண்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தருகிறது.

பட்டுவளர்ச்சித் துறைக்கான நிலையான வளர்ச்சி இலக்குகள் பின்வருமாறு:

**இலக்கு [1]:  வறுமையின்மை:**

**(1.1)எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் தீவிர வறுமை ஒழிப்பு:**

குறைந்தளவு நிலப்பரப்பில் கூட பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ள முடியும். கூலி ஆட்களை பயன்படுத்தாமல், ஒரு ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளும் பொழுது, மூன்று நபர்கள் உள்ளடக்கிய குடும்பம் வாழ ஆதரவாக உள்ளது. குறுகிய காலம், அதிக வருமானம் போன்ற அம்சங்கள் பட்டு வளர்ப்பை சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு ஏற்ற திட்டமாக்குகிறது.

பட்டு விவசாயிகள் மல்பெரி நடவு செய்தல் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் பெற்று வருகின்றனர். பட்டுப்புழுவானது 25–27 நாட்களுக்குள் வளரத்து பட்டுக்கூடுகளை அறுவடை செய்ய முடிவதால், விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் உறுதியான மாத வருமானம் கிடைக்கிறது.

பட்டுவளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு மல்பெரி நடவு மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு மனை அமைக்க பல்வேறு மானிய உதவிகளை பட்டுவளர்ச்சித் துறை வழங்கி வருகின்றது. பட்டு வளர்ப்பு சீரான இடைவெளியில் வருமானம் அளித்து விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2021–22 மாநிலத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்ற பயனாளிகள் |
|---|---|---|
| 1. | மல்பெரி நடவு ஊக்கத்தொகை | 3197 |
| 2. | பட்டுப்புழுவளர்ப்பு மனை கட்ட உதவித்தொகை | 300 |
| 3. | பட்டுப்புழுவளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல் | 1000 |
| 4. | முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் வழங்குதல் | 200 |

## இலக்கு [8]: கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி:

### (8.5) அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் ஆக்கவளமுள்ள வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்குதல்:

பட்டு வளர்ப்பு கிராமப்புற மக்களுக்கு போதுமான வேலைவாய்ப்பு மற்றும் வருமான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் வாழ்க்கை முறையையும் மேம்படுத்துகிறது.

பட்டு விவசாயிகள் தங்களது மல்பெரி தோட்டப் பராமரிப்பிற்கும், பட்டுப்புழு வளர்ப்பிற்கும் ஊரக வேலையாட்களைப் பயன்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பினை வழங்க முடிகிறது.

பெரும்பாலான பண்ணைத் தொழிலாளர்கள், பட்டுநூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் பெண்கள் ஆவர். பட்டு வளர்ப்பில் 60% வேலைகள் பெண்களால் மேற்கொள்ளப்படுவதால், இது கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்கு முக்கிய காரணியாக விளங்குகிறது.



**பட்டுநூற்பு தொழிலில் மகளிர் வேலையாட்கள்**

பட்டுத்தொழிலானது, வருடம் முழுவதும் ஒரு கிலோ கிராம் கச்சாப்பட்டு உற்பத்திக்கு 36 மனித நாட்கள் வேலை வாய்ப்பினை (பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகள்) வழங்கவல்லது என கணக்கிடப்பட்டுள்ளது.

பட்டுத்தொழிலின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திறன் (ஒரு எக்டர் மல்பெரி சாகுபடி):

| செயல்பாடுகள் | ஒரு ஆண்டிற்கான மனித நாட்கள் | |
|---|---|---|
| | ஒரு எக்டருக்கு | ஒரு கிலோ பட்டு நூல் உற்பத்திக்கு |
| மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு | 1899 | 18.08 |
| பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுதல் | 307 | 2.92 |
| பட்டு நெசவு மற்றும் ஆடை உற்பத்தி | 1147 | 10.92 |
| துணை செயல்பாடுகள் | 460 | 4.38 |
| **மொத்தம் (ஒரு எக்டருக்கு)** | **3813** | **36.31** |
| **ஒரு ஏக்கருக்கு** | **1543** | **14.70** |

குறிப்பு: கச்சாப்பட்டு உற்பத்தித் திறன் : 105 கிலோகிராம் / எக்டர்

## இலக்கு [9]: தொழில், புதிய கண்டுபிடிப்பு மற்றும் உட்கட்டமைப்பு:

### (9.3) சிறு தொழில்கள் மற்றும் பிற தொழில் நிறுவனங்களுடன் அணுகுவதை அதிகரித்தல்:

பட்டுக்கூடுகளின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல், சாயமேற்றுதல், நெசவு மற்றும் பிற செயல்பாட்டு அலகுகள் போன்ற சிறுதொழில்கள் அதிகரிக்கும்.

பட்டு உபப்பொருட்களை பயன்படுத்துதல், பட்டுநூல் உற்பத்தி, பட்டுக்கூடு மற்றும் பட்டுநூலில் செய்யப்பட்ட

கைவினைப்பொருட்கள் மற்றும் துணிசாரா பயன்பாடுகளில் செரிசின் என்ற பட்டு புரதமானது, மருத்துவத் துறையில் உயிர்–மருத்துவ சாதனங்கள் மற்றும் அறுவை சிகிச்சை தகடுகள் தயாரிப்பு, அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள் அதிக அளவில் பிரபலமாகி வருகின்றன.

பட்டுநூற்பின் போது கிடைக்கும் கூட்டுப்புழு கழிவில் புரதம் மற்றும் கொழுப்பு நிறைந்திருப்பதால், அவை மதிப்பு கூட்டப்பட்டு கோழி அல்லது மீன் தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது.



கூட்டுப்புழு பதப்படுத்தும் அலகு, உடுமலைப்பேட்டை

பதப்படுத்தப்பட்ட (உலர்ந்த) கூட்டுப்புழு கழிவினை கோழி அல்லது மீன் தீவனமாக விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கப் பெறுவதற்கு பட்டுநூற்பாளர்களை ஊக்குவிப்பதற்காக கூட்டுப்புழு பதப்படுத்தும் அலகு நிறுவிட உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாநிலத்தில் 2021-22 ஆம் ஆண்டில் ஒரு கூட்டுப்புழு பதப்படுத்தும் அலகு நிறுவப்பட்டு செயல்பாட்டிற்கு வரவுள்ளது. மேலும், 2022-23 ஆம் ஆண்டில் கூடுதலாக ஒரு கூட்டுப்புழு பதப்படுத்தும் அலகு நிறுவப்படவுள்ளது.

## 6. பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை மற்றும் பிந்தைய நிலை செயல்பாடுகளை மேற்கொள்ளப் போதுமான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்புகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை பட்டுவளர்ச்சித் துறை பெற்றுள்ளது. மாநிலத்தில் பட்டுத்தொழிலின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

| அரசு உட்கட்டமைப்பு | வ. எண் | பெயர் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆதார விதைப் பண்ணைகள் | 1 | பி3 விதைப் பண்ணைகள் | 5 | 19 |
| | 2 | பி2 விதைப் பண்ணைகள் | 8 | |
| | 3 | பி1 விதைப் பண்ணைகள் | 6 | |
| வித்தகங்கள் | 1 | மாநில அரசு வித்தகங்கள் | 10 | 12 |
| | 2 | மத்திய பட்டு வாரிய வித்தகங்கள் | 2 | |

| அரசு உட்கட்டமைப்பு | வ. எண் | பெயர் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| குளிர்பதன அலகுகள் | 1 | பல்நிலை குளிர்பதன அலகுகள் | 3 | 3 |
| தொழில்நுட்ப சேவை மையங்கள் | 1 | விதை | 3 | 105 |
| | 2 | விரிவாக்கம் | 102 | |
| அரசு பட்டுப் பண்ணைகள் | 1 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 6 | 32 |
| | 2 | கலப்பின பட்டுப் பண்ணை | 6 | |
| | 3 | விவசாயிகள் பயிற்சி மையம் | 10 | |
| | 4 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை | 5 | |
| | 5 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 4 | |
| | 6 | பட்டு உலகம் – பட்டு சுற்றுலா மையம் | 1 | |
| அரசு பட்டுக்கூடு அங்காடிகள் | 1 | விதைக்கூடு அங்காடிகள் | 3 | 24 |
| | 2 | பட்டுக்கூடு அங்காடிகள் | 21 | |
| அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள் | 1 | பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் கூடிய பட்டு நூற்பகங்கள் | 4 | 8 |
| | 2 | பட்டு முறுக்கேற்றும் அலகுகள் இல்லாது தனித்து இயங்கும் பட்டு நூற்பகங்கள் | 4 | |
| பயிற்சி நிலையம் | 1 | தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம் | 1 | 1 |
| பட்டு பரிமாற்றகம் | 1 | அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளை | 2 | 2 |
| கூட்டுறவு சங்கங்கள் | 1 | பட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 26 |
| | 2 | தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் | 1 | |

## 6.1. ஆதார பட்டுப்புழு விதை உற்பத்தி அலகுகள்

பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைத் தொகுதிகளை வித்தகங்களில்

உற்பத்தி செய்ய தேவையான விதைக் கூடுகள் ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.



பி2 விதைப்பண்ணை, மசினகுடி

பட்டுப்புழு விதை உற்பத்தியில் மூன்றடுக்கு முறையில் (பி3 –> பி2–> பி1) பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரிப்பதற்கென துறையின் கீழ் 19 விதைப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

பி1 மட்டத்தில் பட்டு முட்டைகளின் தேவை அதிகமாக இருப்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் ஆதார விதைக் கூடு உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். விதைப்பண்ணைகள் மற்றும் வித்தகங்கள் பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளையும் கலப்பின வீரியத்தையும் பராமரித்து வருவதால், அவை பட்டு வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**2021–22 ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் விதை மற்றும் வர்த்தக ரீதியிலான பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் ஈட்டப்பட்ட வருவாய்**

| மாவட்டம் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | பணி | விதைக் கூடு உற்பத்தி (இலட்சம் எண்களில்) | வர்த்தக ரீதியிலான பட்டுக் கூடு உற்பத்தி (கி.கி.) | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| கிருஷ்ண கிரி | 1 | பேரிகை | பி3 | 0.875 | | 1.357 |
| | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 1.147 | | 3.073 |
| | 3 | ஓசூர் | பி2 | 2.063 | | 3.867 |
| | 4 | கலுக்கொண்டப் பள்ளி | பி3 | 1.192 | | 1.327 |
| | 5 | தளி | பி3 | 0.707 | | 0.696 |
| | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 2.873 | | 7.208 |
| | 7 | உளிமங்கலம் | பி2 | 1.480 | | 2.485 |
| | 8 | மேலகிரி | பி2 | 1.450 | | 1.829 |
| | 9 | கோலட்டி | பி1 | 3.833 | 1698.800 | 14.370 |
| தருமபுரி | 10 | சித்தேரி | பி1 | 0.949 | 101.100 | 2.038 |
| ஈரோடு | 11 | ஆசனூர் | பி2 | 0 | 268.800 | 1.329 |
| | 12 | மாதஹள்ளி | பி1 | 0 | 1133.400 | 6.626 |
| நீலகிரி | 13 | குன்னூர் | பி3 | 0.078 | | 0.361 |
| | 14 | மசினகுடி | பி2 | 2.240 | | 2.217 |
| | 15 | மசக்கல் | பி2 | 1.618 | | 2.118 |
| திருப்பத் தூர் | 16 | அத்தனாவூர் | பி1 | 1.098 | | 1.037 |
| நாமக்கல் | 17 | கொல்லிமலை | பி1 | 0.860 | | 2.049 |
| தேனி | 18 | மயிலாடும் பாறை | பி2 | 2.915 | | 3.943 |
| தென்காசி | 19 | செங்கோட்டை | பி1 | 1.853 | 107.800 | 5.144 |
| | | **மொத்தம்** | | 27.231 | 3309.900 | 63.074 |

### 6.2. வித்தகங்கள்

ஆதார விதைப் பண்ணைகள் / விதை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதைக் கூடுகளைக்

கொண்டு வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்யும் மையங்களே, 'வித்தகங்கள்' ஆகும்.

நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதற்கென 10 மாநில அரசு வித்தகங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, மத்திய பட்டு வாரியத்தின் கீழ் இயங்கும் தேசிய பட்டுப்புழு விதைக் கழகத்தின் (NSSO) 2 வித்தகங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டில், இந்த 10 அரசு வித்தகங்களில் 43.204 இலட்சம் பட்டுமுட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**2021-22 ஆம் ஆண்டில் அரசு வித்தகங்களில் பட்டுமுட்டை உற்பத்தி**

| மாவட்டம் | வ. எண். | வித்தகத்தின் பெயர் | 2021-22 ஆண்டு உற்பத்தி (முட்டைத் தொகுதிகள் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் (இருசுழற்சி) | 7.749 |
| | 2 | கிருஷ்ணகிரி (இருசுழற்சி) | 17.328 |
| தருமபுரி | 3 | சோகத்தூர் (இருசுழற்சி) | 2.376 |
| | 4 | பென்னாகரம் (இருசுழற்சி) | 1.611 |
| கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் (இருசுழற்சி) | 1.122 |
| ஈரோடு | 6 | ஈரோடு (இருசுழற்சி) | 3.651 |
| | 7 | தாளவாடி (இருசுழற்சி) | 2.094 |
| திருப்பத்தூர் | 8 | வாணியம்பாடி (இருசுழற்சி) | 4.650 |
| திருச்சி | 9 | திருச்சி (கலப்பினம்) | 0.093 |
| தென்காசி | 10 | குற்றாலம் (இருசுழற்சி) | 2.530 |
| மொத்தம் | | | 43.204 |



வெளிப்புறத் தோற்றம்  உட்புறத் தோற்றம்

அரசு கலப்பின வித்தகம், கிருஷ்ணகிரி

## 6.3. பல்நிலை குளிர்பதன அலகுகள்

வெண்பட்டுக்கான தேவை அதிகரித்து வருவதால். தமிழ்நாட்டில் 90 சதவீதத்திற்கும் அதிகமான விவசாயிகள் இரு சுழற்சியின (வெண்பட்டு) பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

அரசு வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சியின பட்டு முட்டைகளின் விதை உறக்கத்தினை கட்டுப்படுத்தி கருவின் வீரியத்தை பராமரித்து அவற்றை நான்கு, ஆறு மற்றும் பத்து மாதங்களுக்குப் பின் பொரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி தேவைக்கேற்ப விநியோகம் செய்வதற்காக இரு சுழற்சியின பட்டு முட்டைகள் 2.5°C முதல் 25°C வரையிலான பல்வேறு வெப்ப நிலைகளில் சுமார் 120

முதல் 300 நாட்கள் என முன்னதாக நிர்ணயம் செய்யப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதன அலகில் பதனம் செய்யப்படுகின்றன. இவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட பட்டு முட்டைகள் 10–11 நாட்களில் பொரிந்து முதல் பருவ பட்டுப்புழுவாக வெளிவருகிறது.

இருசுழற்சியின பட்டு முட்டைகளை பதனப்படுத்தி ஆண்டு முழுவதும் விநியோகம் செய்வதற்காக மூன்று பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரிலும், கோயம்புத்தூர் மாவட்டம் சின்னவேடம்பட்டியிலும் செயல்பட்டு வருகின்றன. 2021–2022–ஆம் ஆண்டில் இம்மூன்று பல்நிலை குளிர்பதன அலகுகளில் 40.05 இலட்சம் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டன.

**2021–22 ஆம் ஆண்டில் அரசு பல்நிலை குளிர்பதன அலகுகளில் பதனப்படுத்தப்பட்டுள்ள முட்டைத் தொகுதிகள்**

| மாவட்டம் | வ. எண். | பல்நிலை குளிர்பதன அலகின் பெயர் | 2021–22இல் பதனப்படுத்தப்பட்டுள்ள முட்டைத் தொகுதிகள் (இலட்சம் எண்களில்) | |
|---|---|---|---|---|
| | | | ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை | முட்டை இருப்பு (31.03.2022 அன்று) |
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 12.762 | 8.253 |
| | 2 | கிருஷ்ணகிரி | 23.690 | 13.965 |
| கோயம்புத்தூர் | 3 | சின்னவேடம்பட்டி @ கோயம்புத்தூர் | 3.597 | 2.767 |
| | | **மொத்தம்** | **40.049** | **24.985** |




வெளிப்புறத் தோற்றம் உட்புறத் தோற்றம்

அரசு பல்நிலை குளிர்பதன அலகு, சின்னவேடம்பட்டி

## 6.4. தொழில்நுட்ப சேவை மையங்கள்

தொழில் நுட்ப சேவை மையங்கள் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை அவர்களது இல்லம் தேடிச் சென்று வழங்குகின்றன.




**தொழில்நுட்ப சேவை மையம், ஓசூர்**

மேலும், அவை விவசாயிகளுக்கு பட்டுவளர்ச்சித் துறையின் பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களைப் பெறவும் உதவுகிறது.

மாநிலத்தில் 105 தொழில் நுட்ப சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையத்திலும் ஓர் உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் தலைமையில், 5–7 இளநிலை ஆய்வாளர்கள், பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

## தொழில் நுட்ப சேவை மையங்கள்

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர்<br>திருப்பூர்<br>ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர்<br>திருப்பத்தூர்<br>இராணிப்பேட்டை<br>திருவள்ளூர்<br>காஞ்சிபுரம்<br>செங்கல்பட்டு | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை<br>மற்றும்<br>திருப்பத்தூர்<br>மாவட்ட<br>மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி<br>கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |
| திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர்<br>பெரம்பலூர்<br>நாகப்பட்டினம் | 15 | திருச்சி | 8 |

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | மயிலாடுதுறை | | | |
| | நாமக்கல்<br>கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல்<br>சிவகங்கை | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி<br>மதுரை<br>இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | தென்காசி<br>திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி | 19 | தென்காசி | 7 |
| | | | மொத்தம் | 105 |

## 6.5.அரசு பட்டுப் பண்ணைகள்

மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு செயல்பாடுகளை விளக்கும் மாதிரி அலகுகளாகவும், மத்திய அரசின் பட்டு வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து அறிமுகப்படுத்தப்படும் சமீபத்திய தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கும் மையங்களாகவும் அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த அரசு பட்டுப் பண்ணைகளில் மல்பெரி நாற்று உற்பத்தி, இளம் பட்டுப்புழு (2–வது பருவம் வரை) வளர்ப்பு, முதிர் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், தரமான மல்பெரி நாற்றுகள் மற்றும் ஆரோக்கியமான இளம் பட்டுப்புழுக்களும் இந்த பண்ணைகளின் மூலம் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.



அரசு பட்டுப் பண்ணை, செங்கோட்டை, தென்காசி

இத்துறையின் கீழ் 32 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

- ❖ 6 செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள்,
- ❖ 6 அரசு கலப்பின பட்டுப் பண்ணைகள்,
- ❖ 10 விவசாயிகள் பயிற்சி மையங்கள்,
- ❖ 5 இளம்புழுவளர்ப்புப் பண்ணைகள்,
- ❖ 4 மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள் மற்றும்
- ❖ 1 பட்டு உலகம் (பட்டு சுற்றுலா மையம்).

## 2021-22 ஆம் ஆண்டில் அரசு பட்டுப் பண்ணைகளின் வருவாய்

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓசூர் | 0.346 |
| | 2 | கலப்பின பட்டுப் பண்ணை, ஊத்தங்கரை | 2.114 |
| தருமபுரி | 3 | விவசாயிகள் பயிற்சி மையம், சோகத்தூர் | 0.827 |
| | 4 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, பாப்பாரப்பட்டி | 0.355 |
| சேலம் | 5 | பட்டு உலகம், ஏற்காடு | 0.185 |
| | 6 | விவசாயிகள் பயிற்சி மையம், நத்தக்கரை | 2.490 |
| | 7 | கலப்பின பட்டுப் பண்ணை, மணியார்குண்டம் | 1.797 |
| | 8 | கலப்பின பட்டுப் பண்ணை, புதூர் | 1.013 |
| கள்ளக்குறிச்சி | 9 | கலப்பின பட்டுப் பண்ணை, வெள்ளிமலை | 1.667 |
| ஈரோடு | 10 | விவசாயிகள் பயிற்சி மையம், தாளவாடி | 1.540 |
| | 11 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை இராமாபுரம் | 0.594 |
| | 12 | கலப்பின பட்டுப் பண்ணை, கீர்மாளம் | 0.054 |
| திருப்பூர் | 13 | விவசாயிகள் பயிற்சி மையம், மைவாடி | 0 |
| காஞ்சிபுரம் | 14 | விவசாயிகள் பயிற்சி மையம், விச்சந்தாங்கல் | 1.046 |
| திருப்பத்தூர் | 15 | விவசாயிகள் பயிற்சி மையம், மின்னூர் | 1.192 |

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| திருவண்ணா மலை | 16 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாடானூர் | 0.480 |
| திருப்பத்தூர் | 17 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, புலியூர் | 0.642 |
| கடலூர் | 18 | விவசாயிகள் பயிற்சி மையம், நெய்வேலி | 0.154 |
| திருச்சி | 19 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், உப்பிலியாபுரம் | 0.377 |
| | 20 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கலிங்கப்பட்டி | 0.410 |
| | 21 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கருக்கமடை | 0.235 |
| | 22 | கலப்பின பட்டுப் பண்ணை, பச்சமலை | 0.669 |
| | 23 | விவசாயிகள் பயிற்சி மையம், மணிகண்டம் | 1.996 |
| தஞ்சாவூர் | 24 | விவசாயிகள் பயிற்சி மையம், நாஞ்சிக்கோட்டை | 1.506 |
| திண்டுக்கல் | 25 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, சி.கே.புதூர் | 1.555 |
| சிவகங்கை | 26 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாகம்பட்டி | 0 |
| | 27 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓ.புதூர் | 1.379 |
| இராமநாதபுரம் | 28 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், பாண்டியூர் | 1.775 |
| திருநெல்வேலி | 29 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், திருநெல்வேலி (இருப்பு) வி.எம்.சத்திரம் | 1.012 |
| விருதுநகர் | 30 | விவசாயிகள் பயிற்சி மையம், திருவில்லிபுத்தூர் | 1.538 |

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | 31 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, செவலூர் | 2.071 |
| கன்னியாகுமரி | 32 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், கோணம் | 1.180 |
| | | மொத்தம் | 32.199 |

## 6.5.1 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்தது முதல், இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, 'இளம்புழு வளர்ப்பு' என்றழைக்கப்படுகிறது.



இளம் பட்டுப்புழுக்கள்

சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்ப–வெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும், தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழு வளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது..

இளம்புழு வளர்ப்பு செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்கள் '**இளம்புழு வளர்ப்பு மையங்கள்**' என்று அழைக்கப்படுகின்றன.



**இளம்புழு வளர்ப்பு மையம், அரசு பட்டுப்பண்ணை, ஓசூர்**

மாநிலத்தில் வெற்றிகரமான இருசுழற்சியின பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழு வளர்ப்பு முறை திகழ்கிறது. இளம்புழு வளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதால், பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு காலத்தில் 7 நாட்கள் சேமிக்கப்படுவதுடன், பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்க உதவுகிறது.

பட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான இளம்புழுக்களை விநியோகம் செய்திட பிரத்யேகமாக ஐந்து அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

இது தவிர 37 தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.



தனியார் இளம்புழு வளர்ப்பு மையம், உடுமலைப்பேட்டை

## 6.6 அரசு விதைக்கூடு அங்காடிகள்

விவசாயிகள் மற்றும் அரசு ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டின மற்றும் கலப்பின விதைக் கூடுகள் அரசு விதைக்கூடு அங்காடிகளில் வர்த்தகம் செய்யப்பட்டு தரமான விதை உற்பத்திக்காக வித்தகங்களுக்கு வழங்கப்படுகிறது. விதைக்கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

விதைக்கூடுகள் விற்பனைக்கென மூன்று விதைக்கூடு அங்காடிகள் ஒசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றன. 2021–22 ஆம் ஆண்டில், இவ்விதைக்கூடு அங்காடிகளில் 29,158 கிலோகிராம் விதைக்கூடுகள் ரூ.221.653 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

## 6.7 அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

விவசாயிகளால் எடுத்துவரப்படும் பட்டுக் கூடுகள், அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மூலமாக பட்டு நூற்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசு பட்டுக்கூடு அங்காடிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது. பட்டுக்கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 21 பட்டுக்கூடு அங்காடிகள் உள்ளன. 2021–22 ஆம் ஆண்டில், இந்த பட்டுக்கூடு அங்காடிகளில் 1,364 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.6,400.095 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.


### 2021–22 ஆம் ஆண்டில் அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடு பரிவர்த்தனை

| மாவட்டம் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | பட்டுக் கூடுகள் (மெட்ரிக் டன்களில்) | பரிவர்த்தனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 45.558 | 210.298 |
| | 2 | கிருஷ்ணகிரி | 37.076 | 160.891 |
| தருமபுரி | 3 | பென்னாகரம், பாலக்கோடு | 31.836 | 126.044 |
| | 4 | தருமபுரி | 338.606 | 1785.139 |
| சேலம் | 5 | சேலம் | 93.685 | 403.879 |
| கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் | 158.991 | 732.064 |
| ஈரோடு | 7 | தாளவாடி | 37.484 | 175.827 |
| | 8 | ஈரோடு | 55.950 | 247.010 |
| திருப்பூர் | 9 | மைவாடி | 124.565 | 541.159 |
| திருப்பத்தூர் | 10 | வாணியம்பாடி | 54.950 | 237.249 |
| திருவண்ணா–மலை | 11 | திருவண்ணா மலை | 18.060 | 79.634 |
| திருச்சி | 12 | திருச்சி | 8.411 | 32.058 |
| புதுக்கோட்டை | 13 | புதுக்கோட்டை | 19.278 | 72.568 |
| நாமக்கல் | 14 | இராசிபுரம் | 48.945 | 296.014 |
| திண்டுக்கல் | 15 | திண்டுக்கல் | 10.207 | 37.088 |
| | 16 | பழனி (இருப்பு) சி.கே.புதூர் | 10.285 | 37.430 |
| சிவகங்கை | 17 | சிவகங்கை | 29.115 | 131.829 |
| தேனி | 18 | தேனி | 84.220 | 388.181 |
| தென்காசி | 19 | நன்னகரம் | 70.067 | 317.759 |
| விருதுநகர் | 20 | திருவில்லி புத்தூர் | 60.053 | 260.195 |
| கன்னியாகுமரி | 21 | நாகர்கோவில் | 26.667 | 127.779 |
| மொத்தம் | | | 1364.009 | 6400.095 |





**புதிதாக துவங்கப்பட்டுள்ள அரசு பட்டுக்கூடு அங்காடி, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்**




**கடந்த மூன்று ஆண்டுகளில் பட்டுக்கூடுகளின் சராசரி விலை**

2020–21 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021–22 ஆம் ஆண்டில் பட்டுக்கூடுகளின் சராசரி விலை 38 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆகவே, விவசாயிகளின் பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

பட்டுக்கூடுகள் பரிவர்த்தனையில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க அனைத்து அரசு பட்டுக்கூடு அங்காடிகளிலும் மின்னனு ஏல முறை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.8 அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுத் தொழிலின் முக்கிய பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணை புரிவதற்காக, அரசு பலமுனை பட்டு நூற்பு அலகுகள், பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழில் முனைவோர்களுக்கான மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன.

அரசு பட்டு நூற்பகங்கள், பட்டுக்கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்திப் பொருளான பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன.



அரசு பட்டு நூற்பகம், ஓசூர்



அரசு பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு, நன்னகரம்

இத்துறையின் கீழ் ஆண்டொன்றிற்கு 24 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட எட்டு அரசு பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

2021–22 ஆம் ஆண்டில், அரசு பட்டு நூற்பு அலகுகளில் கச்சாப்பட்டு, முறுக்கேற்றிய பட்டு மற்றும் இதர உபப் பொருட்கள் விற்பனை மூலம் ரூ.696.881 இலட்சம் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.

**2021–22 ஆம் ஆண்டில் அரசு பட்டு நூற்பு அலகுகளில் பட்டு உற்பத்தி மற்றும் வருவாய்**

| மாவட்டம் | வ. எண் | அலகின் பெயர் | கச்சாப் பட்டு உற்பத்தி 2021–22 (கி.கி) | முறுக்கேற்–றிய பட்டு உற்பத்தி 2021–22 (கி.கி) | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 2627.70 | 621.50 | 105.451 |
| சேலம் | 2 | சேலம் | 1746.20 | 569.10 | 108.879 |
| ஈரோடு | 3 | தாளவாடி | 1450.50 | 714.00 | 61.635 |
| திருப்பத்தூர் | 4 | வாணியம் பாடி | 489.45 | – | 20.580 |
| புதுக் கோட்டை | 5 | புதுக் கோட்டை | 1101.00 | – | 43.333 |
| சிவகங்கை | 6 | சிவகங்கை | 2668.00 | – | 110.916 |
| தென்காசி | 7 | நன்னகரம் | 2858.92 | 1876.60 | 148.285 |
| கன்னியா குமரி | 8 | கோணம் | 2221.05 | – | 97.802 |
| **மொத்தம்** | | | **15162.82** | **3781.20** | **696.881** |

## 6.9 தனியார் பட்டு நூற்பகங்கள்

இத்துறையால் தனியார் பட்டு நூற்பு பிரிவிற்கு, பலவகையான ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகள் நியாயமான விலை பெற்றிடும் வகையில், உள்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள் முழுமையாக பயன்படுத்தப்பட, அதிக எண்ணிக்கையிலான பட்டு நூற்பு அலகுகளை நிறுவிட, தொழில்முனைவோர்கள் முன்வரும் வகையில், பல்வேறு வழிகளில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் எட்டு அரசு பட்டு நூற்பகங்கள் தவிர, 172 தனியார் பட்டு நூற்பகங்கள் தொழில் முனைவோரால் இயக்கப்பட்டு வருகின்றன.

**தனியார் பட்டு நூற்பு அலகுகள்**

| வ. எண் | பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சர்க்கா பட்டுநூற்பு அலகுகள் | 17 |
| 2 | காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள் | 88 |
| 3 | பலமுனை பட்டுநூற்பு அலகுகள் | 58 |
| 4 | தானியங்கி பட்டுநூற்பு அலகுகள் | 9 |
| | **மொத்தம்** | 172 |



**காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகு, தருமபுரி**



பலமுனை பட்டு நூற்பு அலகு, உடுமலைப்பேட்டை



தானியங்கி பட்டு நூற்பு அலகு, உடுமலைப்பேட்டை

தரம் குறைவான பட்டுக்கூடுகளை நம் மாநிலத்திலேயே பயன்படுத்திக் கொள்ளும் வகையில்,

2021–22 ஆம் ஆண்டில் ஒரு தானியங்கி டூபியான் பட்டுநூற்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டில், 400 முனைகள் கொண்ட நான்கு தானியங்கி பட்டு நூற்பு இயந்திர அலகுகளும், 200 முனைகள் கொண்ட இரண்டு தானியங்கி பட்டு நூற்பு அலகுகளும், ஒரு பலமுனை பட்டு நூற்பு அலகும் நிறுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றுக்கு 183.00 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.

மேலும், ஒரு தானியங்கி டூபியான் பட்டு நூற்பு இயந்திரம் நிறுவுவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகு, உடுமலைப்பேட்டை**

தொழில் முனைவோர்களை பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட ஊக்குவித்து பட்டு நூற்பு பிரிவினை வலுப்படுத்துவதன் மூலம், தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை முழுமையாக மாநிலத்திற்குள்ளாகவே பயன்படுத்திட இயலும்.


## 6.10 அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகங்கள்

மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டுநூல் காஞ்சிபுரம் மற்றும் சேலத்தில் செயல்பட்டு வரும் அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, பட்டு நூற்பாளர்கள் தங்களது உற்பத்திப்பொருளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது.

பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கு நிலவும் சந்தை விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப்பட்டுநூல் ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் 'டான்சில்க்' போன்றோர், வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டுநூலினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுநூலின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.



**காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் கச்சாப்பட்டு ஏலம் நடைபெறுதல்**




**கடந்த மூன்று ஆண்டுகளில் கச்சாப்பட்டு நூலின் சராசரி விலை**

2021–22 ஆம் ஆண்டில், அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளைகளில் 86.738 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூல் ரூ.2,692.732 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

**2021–22 ஆம் ஆண்டில் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகங்களில் கச்சாப்பட்டு பரிவர்த்தனை**

| வ. எண் | பட்டின் வகை | அளவு (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கச்சாப் பட்டு | 57.284 | 2192.942 |
| 2 | டூபியான் பட்டு | 29.454 | 499.790 |
| மொத்தம் | | 86.738 | 2692.732 |

கச்சாப்பட்டுநூல் பரிவர்த்தனையில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க அரசு அண்ணா பட்டு பரிமாற்றகங்களில் மின்னனு ஏல முறை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.11 தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டுவளர்ச்சித் துறையின் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினை பட்டுவளர்ச்சித் துறை கொண்டுள்ளது.




**தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்**

அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி குறித்த விவரங்கள்:

| வ. எண். | பயிற்சியின் பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | மத்திய பகுதித் திட்டம் : விவசாயிகள் பயிற்சி | 5 நாட்கள் |
| 2. | மத்திய பகுதித் திட்டம் : அலுவலர் பயிற்சி | 5 நாட்கள் |
| 3. | அலுவலர்களுக்கான முனைப்பிலான இணைப்புப் பயிற்சி | 60 நாட்கள் |
| 4. | மேற்பார்வை அலுவலர்களுக்கான நிர்வாகப் பயிற்சி | 3 நாட்கள் |
| 5. | அலுவலர்களுக்கான விரைவு பணியிடைப் பயிற்சி | 30 நாட்கள் |
| 6. | ஆத்மா அலுவலர் பயிற்சி | 3 நாட்கள் |
| 7. | அலுவலர்களுக்கான களப் பயிற்சி | 4 நாட்கள் |



**தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூரில்**
**பயனாளிகளுக்கு வகுப்புகள் நடத்துதல்**




**2021–22 ஆம் ஆண்டில் பயிற்சி வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை**

'பட்டு மலர்' எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/– என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டுவளர்ச்சிக்கு உதவிடும் வகையில் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்துகொள்ள இது துணை புரிகிறது.



## 6.12 கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. 'தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம்' (டான்சில்க்) தலைமைக் கூட்டுறவு இணையமாக செயல்படுகிறது.

### 6.12.1 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுத் தொழிலுக்கு தேவைப்படக் கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவது, மூலப்பொருட்களை ஆயத்தப் பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவது, ஆயத்தப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் சங்க உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது போன்றவை, இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளாகும்.

### 6.12.2 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக, பதிவு செய்யப்பட்டு, காஞ்சிபுரத்தில் இயங்கி வருகிறது.

இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இவ்விணையம் பெருமளவு பட்டினை கொள்முதல் செய்து, தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.



டான்சில்க், காஞ்சிபுரம் கிளையில் முறுக்கேற்றிய பட்டுநூல் விற்பனை

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் 'டான்சில்க்' இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல்

நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக விற்பனை செய்யப்படுகின்றன.

**2021–22 ஆம் ஆண்டில் டான்சில்க், காஞ்சிபுரத்தின் கச்சாப்பட்டு மற்றும் முறுக்கேற்றிய பட்டு நூல் கொள்முதல் மற்றும் விற்பனை**

| வ. எண் | பட்டின் வகை | கொள்முதல் | | விற்பனை | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. கோடியில்) | அளவு (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. கோடியில்) |
| 1. | கச்சாப் பட்டு | 59.913 | 23.24 | 61.176 | 23.443 |
| 2. | டூபியான் பட்டு | 29.454 | 5.035 | 29.530 | 5.096 |
| 3. | முறுக்கேற்றிய பட்டு | 95.520 | 44.872 | 95.520 | 44.888 |
| மொத்தம் | | 184.887 | 73.147 | 186.226 | 73.427 |

## 7. பயிர்க் காப்பீடு

பட்டுக்கூடு உற்பத்தியில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டவும், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகளுக்கு 100 சதவீத பயிர் காப்பீட்டு பிரிமியத் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப்புழு பாதிக்கப்பட்ட பருவத்தின் அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம் மூலம், இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. பட்டு விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் சேதம் மற்றும் தனி நபர் விபத்துக்கான காப்பீடும் இத்திட்டத்தில் அடங்கும்.

| காப்பீட்டு காலம் | பதிவு செய்த விவசாயிகள் | சந்தா தொகை (ரூ. இலட்சத்தில்) | வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பயன்பெற்ற விவசாயிகள் |
|---|---|---|---|---|
| 2020–21 (நவம்பர் –2021 to நவம்பர் – 2022) | 29,172 | 39.673 | 30.807 | 400 |
| 2021–22 (சனவரி–2022 to சனவரி – 2023) | 22,269 | 39.861 | * | – |

*56 பட்டு விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டிற்கான நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. 2021–2022 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

### 8.1 மாநிலத் திட்டம்

பட்டு விவசாயிகளின் நலனுக்காகவும் மாநிலத்தில் பட்டுத்தொழிலின் வளர்ச்சிக்காகவும் மாநில அரசு பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டங்களை செயல்படுத்திட பாதுகாக்கும் வகையில் முக்கிய திட்டங்களை செயல்படுத்திட 2021–2022–ஆம் ஆண்டு மாநிலத் திட்டத்தின் கீழ் ரூ.1868.95 இலட்சம் நிதி பின்வருமாறு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**மாநிலத் திட்டம் 2021–2022**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (ஏக்கர்/ எண்) | அலகு மதிப்பீடு (ரூபாய்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு | மொத்த தொகை |
| 1 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் | 5000.00 | 14000 | 525.00 | 175.00 | 700.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (ஏக்கர்/ எண்) | அலகு மதிப்பீடு (ரூபாய்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு | மொத்த தொகை |
| | தொகை வழங்குதல் | | | | | |
| 2 | தனி பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் | 300 | 400000 | 360.00 | 840.00 | 1200.00 |
| 3 | நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 1000 | 70000 | 525.00 | 175.00 | 700.00 |
| 4 | முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்குதல் | 200 | 35000 | 70.00 | _ | 70.00 |
| 5 | மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 111 | – | 24.45 | _ | 24.45 |
| 6 | அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்த உதவியளித்தல். | 4 | 500000 | 20.00 | _ | 20.00 |
| 7 | மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு பரிசு வழங்குதல் | 6 | – | 4.50 | _ | 4.50 |
| 8 | 14 அரசு பட்டுப்பண்ணைகளில் இளம்புழுவளர்ப்பு மையங்கள் நிறுவுதல் | 14 | 700000 | 98.00 | _ | 98.00 |
| 9 | துறையின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குதல் | ரொக்கமாக | – | 242.00 | _ | 242.00 |
| | | | மொத்தம் | 1868.95 | 1190.00 | 3058.95 |

## 8.2 பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

2021–2022–ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் ரூ.151.975 இலட்சம், துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக கீழ்க்கண்டவாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி 2021–2022**

| வ. எண் | பணிகள் | மொத்த ஒப்பளிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 'பட்டு மலர்' மாத இதழ் அச்சிட்டு வழங்குதல் | 7.514 |
| 2 | பட்டு விவசாயிகளுக்கான பயிர்க்காப்பீட்டுத் திட்டம் | 40.084 |
| 3 | பிஎஸ்என்எல் சிம் கார்டுக்கான ஆண்டு சந்தா செலுத்துதல் | 1.780 |
| 4 | அரசு பட்டுப்பண்ணைகள், அரசு வித்தகங்கள், அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் அரசு பட்டுநூற்பு அலகுகளில் உள்ள கட்டடங்களில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 40.332 |
| 5 | அரசு பட்டுப்பண்ணைகள், அரசு பட்டுநூற்பு அலகுகள் மற்றும் அரசு பட்டுக்கூடு அங்காடிகளுக்குத் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | 52.665 |
| 6 | வாணியம்பாடி அரசு பட்டுக்கூடு அங்காடிக்கு சுழல் நிதி வழங்குதல் | 5.000 |
| 7 | மின்னனு பாகங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் இயக்ககத்தில் பிரிவு பகிர்வு வேலை மேற்கொள்ளுதல் | 4.600 |
| | **மொத்தம்** | **151.975** |

8.3 மத்திய பகுதித் திட்டம், 'சில்க் சமக்ரா'

பட்டுத் தொழில் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டமான "சில்க் சமக்ரா" திட்டம், நாட்டில் பட்டுவளர்ச்சி நடவடிக்கைகளை நிலைப்படுத்துவதையும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது கீழ்க்காணும் நான்கு முக்கிய உட்கூறுகளை ஒருங்கிணைத்து முழு பட்டு மதிப்பு சங்கிலியின் வளர்ச்சிக்கு வகுக்கிறது,

அ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்ப பரிமாற்றம், பயிற்சி மற்றும் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள்.

ஆ. விதை அமைப்பு

இ. ஒருங்கிணைப்பு மற்றும் சந்தை மேம்பாடு

ஈ. தரச் சான்றிதழ் அமைப்புகள் (QCS) மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு.

சில்க் சமக்ரா திட்டம் மல்பெரி, வன்யா மற்றும் பட்டுக்கூட்டிற்கு பிந்தைய துறைகளின் கீழ் பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டக்கூறுகளையும் கொண்டுள்ளது. இத்திட்டம், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன், கச்சாப் பட்டுத் துணியின் தரம், உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான மாநில அரசுகளின் முயற்சிகளை ஊக்குவிக்கிறது.

2021–2022–ஆம் ஆண்டில் மத்திய பகுதித் திட்டமான சில்க் சமக்ராவின் கீழ் பல்வேறு திட்டங்கள்


செயல்படுத்துவதற்காக ரூ.1924.177 இலட்சம் மத்திய பட்டு வாரியம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**சில்க் சமக்ரா திட்டத்தின் உட்கூறுகள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| அ | விதை | | | | |
| 1. | மாநில பட்டு முட்டை உற்பத்தி செய்யும் அலகினை மேம்படுத்துதல் @ அரசு வித்தகம், தென்காசி (50:50) | எண் | 47.60 | மத்திய பட்டு வாரியம் (50%): 23.80<br>மாநில அரசு (50%) : 23.80 | |
| 2. | அரசு வித்தகத்திற்கு தேவையான பட்டுமுட்டை பரிசோதனை செய்யும் கருவிகள் கொள்முதல் செய்தல் (50:50) | எண் | 16.00 | மத்திய பட்டு வாரியம் (50%): 8.00<br>மாநில அரசு (50%) : 8.00 | |
| ஆ | பட்டுக்கூட்டிற்கு முந்தைய நிலை | | | | |
| 1. | கிசான் மல்பெரி நாற்றாங்கால் அமைக்க உதவியளித்தல் | ஏக்கர் | 1.50 | 1.125 | 1.350 |
| 2. | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | ஏக்கர் | 0.50 | 0.375 | 0.450 |
| 3. | தனி பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட | எண் | 4.00 | 3.000 | 3.600 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| | உதவியளித்தல் | | | | |
| 4. | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | எண் | 0.75 | 0.563 | 0.675 |
| 5. | புழுவளர்ப்பு கிருமிநாசினிகள் / இடுபொருட்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | எண் | 0.05 | 0.038 | 0.045 |
| 7. | இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல் | எண் | 12.00 | 9.000 | 10.800 |
| 8. | பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் அமைக்க உதவியளித்தல் | எண் | 1.75 | 1.132 | 1.575 |
| இ | பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலை | | | | |
| 1. | தானியங்கி பட்டுநூற்பு இயந்திர அலகு நிறுவுதல் – 400 முனைகள் | எண் | 141.02 | 105.765 | 126.918 |
| 2. | பட்டு முறுக்கேற்றும் அலகு நிறுவுதல் | எண் | 9.74 | 7.308 | 8.769 |
| 3. | அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடு பரிசோதனை மையங்கள் அமைத்தல் | எண் | 2.50 | 100% மத்திய பட்டு வாரியம் | |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| 4. | கச்சாப்பட்டு பரிசோதனை மையம் நிறுவுதல் | எண் | 7.25 | 100% மத்திய பட்டு வாரியம் | |
| ஈ | பயிற்சி மற்றும் சேவைகள் (100% மத்திய பட்டு வாரியம்) | | | | |
| 1. | பட்டுவளர்ச்சி வள மையம் அமைத்தல் | எண் | 2.00 | 100% மத்திய பட்டு வாரியம் | |
| 2. | பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் | எண் | 0.07 | 100% மத்திய பட்டு வாரியம் | |
| 3. | தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு | ரொக்க மாக | | 100% மத்திய பட்டு வாரியம் | |




**கடந்த மூன்று ஆண்டுகளில் திட்டங்களுககான நிதி ஒதுக்கீடு**

## 8.4 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்கள்

பட்டுவளர்ச்சித் துறையானது மாநிலத்தில் பட்டு வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக, வேளாண்மை மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு முதன்மைத் திட்டங்களின் கீழ் பயனாளிகள் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 8.4.1 தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம் (NMSA)

2021-22 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறையுடன் ஒருங்கிணைந்து, தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 250.00 ஹெக்டேரில் மரமல்பெரி நடவு செய்வதற்கும் மற்றும் 300 மண்புழு உரக்குழிகள் கட்டுவதற்கும் ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மர மல்பெரித் தோட்டம்




மண்புழு உர அலகு

## 8.4.2 பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டம் (PMKSY)

பிரதான் மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறையுடன் ஒருங்கிணைந்து, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் மற்றும் பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் விவசாயிகளின் மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர் பாசன முறைகள் நிறுவப்பட்டு வருகிறது.



**மல்பெரித் தோட்டத்தில் சொட்டுநீர்ப்பாசனம்**

## 8.4.3 தேசிய ரூர்பன் (கிராமப்புற – நகர்ப்புற) இயக்கம் (NRuM)

பட்டுத்தொழிலின் வளர்ச்சிக்காக தேசிய ரூர்பன் இயக்கத்தின் (NRuM) கீழ் பல்வேறு மாவட்டங்களில்

பயனாளிகள் சார்ந்த நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தேனி மாவட்டம், கோட்டூர் கிராமத்தில் ரூ.2.65 கோடி மதிப்பில் ஒரு தானியங்கி பட்டுநூற்பு இயந்திரம் (ARM) அலகு நிறுவப்படவுள்ளது.



**தேசிய ரூர்பன் இயக்கத்தின் (NRuM) கீழ் தேனி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் தானியங்கி பட்டுநூற்பு அலகின் கட்டுமானப் பணிகள்**

- மேலும், மல்பெரி நடவு செய்தல் மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு மனை கட்டுதல் ஆகிய செயல்பாடுகளுக்கு கோட்டூர், உப்பார்பட்டி, பூமலைக்குண்டு ஆகிய கிராமங்களில் உள்ள 3 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு

உதவித்தொகை வழங்குவதற்காக ரூ.54.00 லட்சம் (ரூ.18.00 லட்சம்/மகளிர் சுய உதவிக் குழு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

- கிருஷ்ணகிரி மாவட்டம், பெலத்தூர் ஊராட்சியில் ரூ.2.60 கோடி மதிப்பில் ஒரு தானியங்கி பட்டுநூற்பு இயந்திரம் (ARM) அலகு நிறுவப்படவுள்ளது.

### 8.4.4 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் (MGNREGS)

பட்டுவளர்ப்பின் மூலம் வருவாய் ஈட்டும் நோக்கில், 37 மாவட்டங்களில் சுய உதவி குழுக்கள் / சமுதாயப் பயன்பாட்டிற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் (MGNREGS) கீழ், 400 பட்டுப்புழு வளர்ப்பு மனைகள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மூலம் அமைத்துத்தரப்படும்.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் (MGNREGS) கீழ் அமைக்கப்பட்ட பட்டுப்புழுவளர்ப்பு மனை

## 9. தகவல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டிற்காக துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் புது நடவடிக்கைகள்

### 9.1 பட்டுவளர்ச்சித் துறை சார்ந்த தகவல்களை உழவன் செயலியில் சேர்த்தல்

பட்டுக்கூடு மற்றும் பட்டுநூலின் தினசரி சந்தை விலை, வட்டார அளவிலான விரிவாக்க அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் மற்றும் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பயனாளிகள் நலன் சார்ந்த திட்டங்கள் குறித்த தகவல்கள் விவசாயிகள் அறிந்து பயனடையும் வகையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் "உழவன் செயலி"யில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும்,

இச்செயலியில் உள்ள தகவல்கள் மூலம் விவசாயிகள் பயனடைகிறார்கள் மற்றும் இது துறையின் பட்டுவளர்ச்சி விரிவாக்க பணிகளை வலுப்படுத்த உதவுகிறது.

| விவரங்கள் | பயனர்கள் (மார்ச் 2022வரை) |
|---|---|
| பட்டுக்கூடு மற்றும் பட்டுநூலின் தினசரி சந்தை விலை, | 28,868 |
| விரிவாக்க அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் | 17,730 |
| திட்டங்கள் குறித்த தகவல்கள் | 33,614 |

### 9.2 அலுவலக கோப்புகள் மேலாண்மையை மின்னனுமயமாக்குதல்

பணி அடிப்படையிலான அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரி உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அலுவலக கோப்பு மேலாண்மையை மின்னனுமயமாக்குதல் தொடர்பான அடிப்படை பயிற்சி இயக்கக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இயக்கக அலுவலக கோப்பு மேலாண்மை மின்னனு முறையில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 9.3 துறையின் மேம்பாட்டிற்காக இருமொழி இணையதளத்தை உருவாக்குதல்

பட்டுவளர்ச்சித் துறையின் இணையதள உள்ளடக்கங்கள் GIGW வழிகாட்டுதல்களின்படியும்,

இருமொழியாகவும் மாற்றப்பட்டுள்ளன. இணையதளத்தினை https://tnsericulture.tn.gov.in என்ற இணையதள முகவரியில் (அ) பின்வரும் QR குறியீட்டின் மூலம் அணுகலாம்.

## 9.4 துறையின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு மென்பொருள் உருவாக்குதல்

துறையின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்கவும் தானியங்குபடுத்தவும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு, ERP (Enterprise Resource Planning) போன்று ஒரு மென்பொருள் உருவாக்கும் பணியில் துறை ஈடுபட்டுள்ளது. பட்டு முட்டை (DFLs) உற்பத்தி முதல் கச்சாப்பட்டு உற்பத்தி

வரையிலான அனைத்து செயல்பாடுகளையும், கண்காணித்து, கண்டறிந்து மற்றும் தீர்ப்பது இந்த மென்பொருளின் முக்கிய நோக்கமாகும்.

## 9.5 துறையின் பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் அண்ணா பட்டுபரிமாற்றகங்களை மின்னனு தேசிய வேளாண்மை அங்காடியுடன் (e–NAM) ஒருங்கிணைத்தல்

பட்டுக்கூடுகள் மற்றும் பட்டுநூலின் மின்னனு ஏல முறைக்காக இந்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் மின்னனு தேசிய வேளாண்மை அங்காடியின் (e–NAM) இணையதளம் மூலம் மேற்கொள்ள, இத்துறையின் பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் அண்ணா பட்டுப் பரிமாற்றகங்களை அத்தளத்தில் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அகில இந்திய மின்னனு வணிக தளமான மின்னனு தேசிய வேளாண்மை அங்காடி (e–NAM) உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தொலைதூர ஏலத்திற்கு வழிவகுக்கிறது மற்றும் வணிகர்களிடையே போட்டியை அதிகரித்து பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்கிறது.

## 10. 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | | **2022–2023 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | **திட்டப் பணிகள்** | | |
| அ | 1. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | 150.00 | 350.00 |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (**கணக்குகள் இடையே மாற்றம்**) | 200.00 | |
| ஆ | புதிய திட்டங்கள் | | 1868.96 |
| இ | மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| ஈ | சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| | **திட்டப் பணிகள் மொத்தம்** | | **2218.98** |
| 2 | **திட்டம் சாரா பணிகள்** | | |
| | அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன | | 6029.03 |
| | **ஒட்டு மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)** | | **8248.01** |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

### 1. முன்னுரை

"பூம்புகார்" என்று அனைவராலும் அறியப்படும் **தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்** பொதுத் துறை நிறுவனமாக 1973–ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டது. இது மாநிலத்தின் கைவினைத் தொழிலுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்பட்ட பித்தளை கலைப்பொருட்கள், பஞ்சலோக சிலைகள், மரச்சிற்பங்கள், கற்சிற்பங்கள், காகிதக்கூழ் பொம்மைகள், களிமண் பொம்மைகள், சுடு களிமண் பொம்மைகள், தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் கலைத்தட்டு மற்றும் சித்திரத்தையல் வேலைகள் ஆகிய கைவினைப்பொருட்களை பிரபலபடுத்தவும், காட்சிப்படுத்தவும் முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மேலும் அவர்கள் தயாரிக்கும் பொருட்களை மாநிலம் மற்றும் நாடெங்கும் வணிகம் மேற்கொண்டு அத்துடன் கலை ஆர்வலர்களுக்கும் அவர்களின் தேவையை நிறைவேற்றுகிறது.

2. முக்கிய நோக்கங்கள்

- தமிழ்நாடு கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

- கைவினைஞர்களுக்கு உரிய பயிற்சி அளித்து புதிய வடிவமைப்புகளை உற்பத்தி செய்ய ஊக்குவித்து அதன் மூலம் அவர்களின் திறனை மேம்படுத்தி அவர்கள் உருவாக்கும் பொருட்களின் உற்பத்தி மற்றும் தரத்தை உயர்த்துதல்.

- புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதை ஊக்கப்படுத்தி, கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்.


- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்து, கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளை நீக்குதல்.

- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்தல்.

- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விவரங்களை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல் மூலம் சந்தை வாய்ப்புகளை விரிவாக்குதல்.

- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் கலைப்படைப்பு மற்றும் அர்ப்பணிப்பை விருதுகள் வழங்கி அங்கீகரித்தல்.

# 3. நிர்வாக அமைப்பு



### 4. நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

நிலையான வளர்ச்சி இலக்குகள், ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்காக வகுக்கப்பட்டுள்ளன, இது சிறந்த எதிர்காலத்திற்காக வகுக்கப்பட்ட செயல் திட்ட குறிகாட்டிகளுடன் பதினேழு இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

நீண்ட கால மற்றும் குறுகிய கால நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ளது. கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், பயிற்சி, சந்தைப்படுத்தல், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் நேரடி உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப்பொருட்கள் முக்கியமான நகரங்களில் அமைந்துள்ள அதன் விற்பனை நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, அத்துடன் ஆண்டு முழுவதும் நாடெங்கும் நடைபெறும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதன் மூலமாகவும் சந்தைப்படுத்தி வருமானம் ஈட்டுகின்றனர்.

இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிலையான வளர்ச்சி இலக்குகள் பின்வருமாறு:–

**இலக்கு எண். 1 – வறுமையின்மை**

நிலையான வளர்ச்சி இலக்குகளின் முக்கிய நோக்கம் வறுமையை ஒழிப்பதாகும்.

**1.1 அனைத்து மக்களின் வறுமையை ஒழித்தல்**

இலக்கு எண் 1.1 ஒரு குறிகாட்டியை உள்ளடக்கியது:–

குறிகாட்டி 1.1.1 "சர்வதேச வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகையின் விகிதம் பாலினம், வயது, வேலைவாய்ப்பு நிலை மற்றும் புவியியல் இருப்பிடம் (நகர்ப்புறம்/கிராமப்புறம்)".

"COVID–19 பெருந்தொற்று காரணமாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் பொருளாதார நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டது. இதனால் மக்களின் வருமானம் குறைந்து மிகுந்த வறுமைக்கு தள்ளப்பட்டார்கள். இளம் தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் முதியவர்களை விட இருமடங்கு அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது" – SDG.

சுமார் 1,000 கைவினைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி பெற்ற கைவினைஞர்களில் பெண்கள் மற்றும் இளைய கைவினைஞர்களே அதிகம்.

கைவினைஞர்களுக்கு தற்போதைய தொழில் நுட்பங்கள் மற்றும் வடிவமைப்புகளை பின்பற்ற 6,212

இலவச கைவினை உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வருமானம் ஈட்டவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் இந்தியாவின் முக்கிய நகரங்களில் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

நாட்டின் புகழ்பெற்ற நிறுவனங்களின் வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்துவதன் மூலம் கைவினைஞர்கள் தங்கள் உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிக்க தற்போதைய வடிவமைப்புகளில் தொழில்நுட்ப பயிற்சி பெற்றுள்ளனர். இதனால் வறுமை குறைய வாய்ப்புள்ளது.

**இலக்கு எண். 5 – பாலின சமத்துவம்**

இலக்கு எண் 5 பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு சம உரிமைகள், பணியிட பாகுபாடு அல்லது வன்முறை உட்பட பாகுபாடு இல்லாமல் சுதந்திரமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பாலின சமத்துவத்தை அடைவது மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு அதிகாரம் அளிப்பதாகும்.

**இலக்கு எண். 5.1: பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்**

இந்த இலக்குக்கு ஒரு குறிகாட்டி உள்ளது. குறிகாட்டி 5.1.1: பாலின அடிப்படையில் சமத்துவம் மற்றும் பாகுபாடு

இல்லாததை ஊக்குவிக்க, செயல்படுத்த மற்றும் கண்காணிக்க சட்ட கட்டமைப்புகள் உள்ளனவா இல்லையா–SDG

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அரசின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை கடைப்பிடித்து செயல்படுத்துகிறது. ஊதியம், பதவி உயர்வு மற்றும் பலவற்றின் மூலம் அதன் நிறுவனத்தில் பாலின சமத்துவத்தை கண்காணிக்கிறது.

**இலக்கு எண். 5.5: தலைமை மற்றும் முடிவெடுப்பதில் பெண்களின் முழுப் பங்களிப்பை உறுதி செய்தல்.**

குறிகாட்டி 5.5.2: நிர்வாக பதவிகளில் பெண்களின் விகிதம்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தில் உள்ள பெண்கள், விற்பனை நிலையங்கள், நிதிப் பிரிவு, மேம்பாட்டுப் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் உதவி மேலாளர்களாக பல நிர்வாகப் பதவிகளை வகிக்கின்றார்கள்.

**இலக்கு எண். 5.b: தொழில்நுட்பத்தின் மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை ஊக்குவித்தல்.**

இக்கழகத்தின் அனைத்து பெண் ஊழியர்களுக்கும் அவர்களின் பணியிடத்தில் மென்பொருள் தொழில்

நுட்பத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு, அன்றாட வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கணினிகள் மற்றும் ஐபேட்கள் வழங்கப்படுகின்றன. இக்கழகத்தின் விற்பனை, நிதி, கணக்கு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் அவ்வப்போது மென்பொருள் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

**இலக்கு எண். 8 – ஒழுக்கமான வேலை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம்**

**இலக்கு எண் 8.5 பெண்கள் மற்றும் ஆண்கள் அனைவருக்கும் சம உற்பத்தி வேலைவாய்ப்பை அடைதல்**

குறிகாட்டி 8.5.1: பெண் மற்றும் ஆண் ஊழியர்களின் சராசரி வேலை நேர ஊதியம், தொழில், வயது மற்றும் ஊனமுற்ற நபர்கள்

நீண்ட கால உத்தியாக முக்கிய கைவினைப் பொருட்கள், 2 நலிந்து வரும் கைவினை பொருட்களான சுடுகளிமண் மற்றும் பத்தமடை பாய் போன்ற கைத்திறத் தொழில்களுக்கு பொது வசதி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பொது வசதி மையங்களில் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனை கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் சுமார் 5,000 கைவினைஞர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC) உருவாக்கி அங்கு நவீன மாதிரிகள் தயாரிக்க முப்பரிமாண வடிவமைப்புகள் செய்யப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான வசதிகள் மூலம் மாற்றுத்திறனாளி கைவினைஞர்கள் உட்பட அனைத்து வயதுடையவர்கள் மற்றும் ஆண், பெண் இருபாலரும் ஒரு நிலையான வருவாயினை பெறுகின்றனர்.

**இலக்கு எண். 9 – தொழில், புதுமை மற்றும் உள்கட்டமைப்பு**

இலக்கு எண் 9.5: ஆராய்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் தொழில்துறை தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்

குறிகாட்டி 9.5.1. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவுகள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தில், கைவினைப் பொருட்களில் புதிய வடிவமைப்புகள் மற்றும் நினைவுப் பொருட்களை அறிமுகப்படுத்துவதற்காக அதன் தலைமை அலுவலகத்தில் ஒரு வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

மெய்நிகர் தோற்றம் (VR) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய முதல் கைவினைக் கழகம் தமிழ்நாடு

கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஆகும். இந்த VR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மெய்நிகர் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தாமல் இந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தப்படுகின்றன.

**இலக்கு எண். 9.b: உள்நாட்டு தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தொழில்துறை பல்வகைப்படுத்தலுக்கு ஆதரவு.**

இலக்கு எண். 9.b: "வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் உள்நாட்டு தொழில்நுட்ப மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை ஆதரித்தல், மற்றவற்றுக்கு இடையே, தொழில்துறை பல்வகைப்படுத்தல் மற்றும் பொருட்களின் மதிப்பு கூட்டல் ஆகியவற்றிற்கு உகந்த கொள்கை சூழலை உறுதி செய்தல்" – SDG.

குறிகாட்டி 9.b.1. "மொத்த மதிப்பில் சேர்க்கப்பட்ட நடுத்தர மற்றும் உயர்–தொழில்நுட்பத் துறை மதிப்பின் விகிதம்"

பூம்புகார் நிறுவனம், கைவினைப் பொருட்களுக்கான முப்பரிமாண அச்சு இயந்திரங்களை பயன்படுத்தி தற்கால வடிவமைப்புகளை உருவாக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை நிறுவியுள்ளது. கைவினைத் துறையில் புதிய தற்கால வடிவமைப்புகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வடிவமைப்புகளை

புதுமைப்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. இது ஒரு நீண்டகால உத்தியாகும்.

## 5. சந்தை செயல்பாடுகள்

### விற்பனை நிலையங்கள்

இந்நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சுவாமிமலை, மாமல்லபுரம், புதுதில்லி, கொல்கத்தா, கேவாடியா (குஜராத்) மற்றும் வண்டலூர் உயிரியல் பூங்கா, சென்னை விமான நிலையம், ஆகிய இடங்களில் அமைந்துள்ள 12 பிரதான விற்பனை நிலையங்கள் மற்றும் 10 துணை விற்பனை நிலையங்களையும் கொண்டுள்ளது.

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனை நடவடிக்கைகள் (Computerised Billing) கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளது. மேலும், CCTV கண்காணிப்பு கேமரா போன்ற நவீன அம்சங்களை கொண்டு வாடிக்கையாளர்களுக்கு இனிமையான விற்பனை அனுபவத்தைப் பெற தகுந்த சூழலைக் கொண்டுள்ளது.



பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை




பூம்புகார் விற்பனை நிலையம், புதுதில்லி

## 6. கண்காட்சிகள்

பூம்புகார் நிறுவனம் நாடெங்கும் உள்ள முக்கிய நகரங்களில் காந்தி சிற்ப பஜார், கிராப்ட் பஜார் போன்ற கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இத்தகைய கண்காட்சிகளில் நாடெங்கிலுமிருந்து தலைச்சிறந்த கைவினைக் கலைஞர்கள் தங்களது சிறந்த படைப்புகளுடன் கலந்துக் கொள்கிறார்கள்.

இக்கண்காட்சிகளின் முக்கிய நோக்கம் கைவினைக் கலைஞர்கள் தங்களது படைப்புகளை நேரடியாக பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஏதுவாக அமைவதால், கைவினைப் பொருட்கள் நியாயமான விலையில் விற்கப்படுகிறது.

சென்ற இரண்டு ஆண்டுகளில் கொரானா பெருந்தொற்றின் காரணமாக கண்காட்சிகளை நடத்த இயலவில்லை. பூம்புகார் விற்பனை நிலையங்களில் மட்டும் 75 கண்காட்சிகள் நடத்தப்பட்டது. இவ்வாண்டு 75-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 39 சிறப்புக் கண்காட்சிகள் பூம்புகார் விற்பனை நிலையங்களில் நடத்தப்பட்டன.



கொலு பொம்மைகள் கண்காட்சி
பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை

6.1. வாங்குவோர் – விற்போர் சந்திப்பு :

கைவினைத் துறையில் சம்மந்தப்பட்ட தயாரிப்பாளர்கள், வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள், வடிவமைப்பாளர்கள், சம்மந்தப்பட்ட துறையினர் மற்றும் தலைச்சிறந்த கைவினை கலைஞர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம் நடத்தி இத்துறை மேம்பாட்டிற்கான உத்திகளை வகுக்கும் எண்ணத்துடன் வாங்குவோர் – விற்போர் சந்திப்பு டிசம்பர் 2021–இல் லலித்கலா அகாடமியில் நடத்தப்பட்டது. அதில் ரூ.70.00 இலட்சம் விற்பனையை ஈட்டியது.

### 6.2. துபாய் எக்ஸ்போ 2022:

துபாய் எக்ஸ்போ திடலில் அமைந்துள்ள இந்திய கூட்டரங்கில் 25.03.2022 முதல் 31.03.2022 வரை தமிழ்நாடு வாரமாக கொண்டாடப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 25.03.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதில் தமிழகத்தின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் தொழில்துறை வளர்ச்சி சாதனைகள் காட்சிப்படுத்தப்பட்டன. பொதுமக்களை கவரும் வண்ணம் பூம்புகார் கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்தி, செய்முறை விளக்கம் செய்தும் மேலும் மெய்நிகர் தோற்ற கருவிகளால் கைவினைப் பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அரசு உயர் அதிகாரிகள், துபாயில் வாழும் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பெரும் அளவில் கலந்துக்கொண்டார்கள்.


Poompuhar
Hand in hand with our artisans ...


GOVERNMENT OF TAMIL NADU



துபாய் எக்ஸ்போ 2022


7. ஏற்றுமதி விற்பனை

பூம்புகார் நிறுவனம், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. கலைநயமிக்க பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், மரச்சிற்பங்கள், கற்சிற்பங்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத்தட்டுகள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப் பொருட்களாகும்.

8. விற்பனை அளவு

இந்நிறுவனம் 2021–2022–ஆம் ஆண்டு கோவிட்–19 பெருந்தொற்று பாதிப்பின் காரணமாக வெளிநாட்டு

வாடிக்கையாளர்களின் வருகை மிகக்குறைவாக இருந்தபோதிலும், இந்த அரசின் வழிகாட்டுதலின்படி இந்நிறுவனத்தின் பணியாளர்களின் கடின உழைப்பினால் ரூ.29.57 கோடி விற்பனையை எய்தியுள்ளது. இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் தொடர்ச்சியான வளர்ச்சியை அடைந்து வருகிறது. 2022-2023-ஆம் ஆண்டிற்கான விற்பனை இலக்கினை ரூ.40.00 கோடியாக நிர்ணயம் செய்துள்ளது.




**விற்பனை அளவு**

## 9. விலைக்கொள்கை

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனையாகும் கைவினைப் பொருட்களுக்கு தனித்துவமான விலைக்கொள்கை பின்பற்றப்படுகிறது. பொருட்களின் தரம் மற்றும் வேலைப்பாடுகள் சமரசம்

செய்யாமல் தனியார் மற்றும் மொத்த சந்தைக்கு நிகராக இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த திருத்தப்பட்ட விலைக்கொள்கை மூலம் விரைவாக விற்பனையாகும் தரமான கைவினைப்பொருட்கள் விற்பனை நிலையங்களிலும், இணையதளத்தின் மூலமாகவும் விற்பனை செய்யப்படும். இது பூம்புகார் நிறுவனத்தின் மீது வாடிக்கையாளர்களுக்கு மேலும் அதிக நம்பிக்கையை உருவாக்கும்.

## 10. சிறப்பு திட்டங்கள்

பூம்புகார் தனது விற்பனை நிலையம் மற்றும் இணையதளத்தின் மூலமாக கிடைக்கும் வருவாயுடன், சிறப்பாணைகள் மூலமாக கூடுதல் வருவாயினை ஈட்ட மேற்கொண்ட சிறப்பு முயற்சிகள் பலனளித்துள்ளன. அதனடிப்படையில் விமான நிலையங்கள், முக்கிய பெருநிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் கைவினைப்பொருட்களைக் கொண்டு அழகுப்படுத்தும் திட்டங்களை பூம்புகார் நிறைவேற்றியது. மேலும், அரசு சார்ந்த அமைப்புகளுக்கு பதக்கங்கள், பரிசு கோப்பைகள் மற்றும் கலைப்பொருட்களை விற்பனை செய்துள்ளது. இத்திட்டங்கள் மூலம் 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

11. **வியாபார நிறுவனங்களுடன் வணிக மேம்பாடு**

பூம்புகார் தனது கைவினைப்பொருட்களை மொத்தம் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு B2B எனப்படும் வர்த்தக பரிவர்த்தனையை இணையவழி மூலமாகவும், இணையவழி அல்லாத நேர்முக விற்பனை வாயிலாகவும் வணிகம் மேற்கொண்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் தமிழ்நாடு கைவினைப்பொருட்களை இணைய தளத்தில் விற்பனை செய்ய தகுந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய தேவையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கைவினைஞர்களின் தயாரிப்புகளை சில்லறையாகவும் மற்றும் மொத்தமாகவும் விற்பனை செய்ய இது உதவும்.

12. **மின் வணிகம்:**

பூம்புகார் தனது பொருட்களை நேரடியாக மின் வணிகம் (Online) மூலம் விற்பனை செய்வதற்கு www.poompuhar.com என்ற பெயரில் மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. இந்நிறுவனம் மின் வணிக நிறுவனங்களான அமேசான் (Amazon) மற்றும் பிளிப்காட் (Flipkart) போன்ற நிறுவனங்கள் மூலம் பூம்புகார் தயாரிப்புகளின் விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட அனைத்து முன்னனி வலைதள நிறுவனங்களிலும் பிரத்யேக மின்வலை தள பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இணையத்தில் மின் வணிகத்தை அதிகப்படுத்துவதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.


## 13. பூம்புகார் உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம், சொந்தமாக 7 உற்பத்தி நிலையங்களை நாச்சியார்கோவில் (வெண்கலம்/பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள்/பித்தளை கலைப் பொருட்கள்), வாகைக்குளம் (பித்தளை விளக்குகள் / பித்தளை கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிற்பங்கள்), தஞ்சாவூர் (தஞ்சாவூர் கலைத்தட்டுகள்), கள்ளக்குறிச்சி (மரச்சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த உற்பத்தி நிலையங்களில் நிரந்தர கைவினைஞர்களும், துண்டுக்கூலி பணியாளர்களும் (கைவினைஞர்கள்) பணியாற்றி வருகின்றனர்.



**பித்தளையிலான அன்னம் கிளை விளக்கு**

கடந்த ஆண்டில் (2021–2022) மேலே குறிப்பிட்டுள்ள உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ.314.45 இலட்சங்கள் ஆகும். இது முந்தைய ஆண்டில் உற்பத்தி செய்த ரூ.235.38 இலட்சங்களைவிட கூடுதலாக ரூ.79.07 இலட்சங்கள் உற்பத்தியின் அளவு உயர்ந்து உள்ளது.




**உற்பத்தி அளவு**

## 14. புதிய நிர்வாகம், சந்தை மற்றும் உற்பத்தி முயற்சிகள்

பூம்புகார், சந்தை மற்றும் நுகர்வோர் தேவையினை மேம்படுத்தவும், தனியார் விற்பனையாளர்களுக்கு நிகராக குறைந்தபட்ச விலையில் உற்பத்திச் செய்யும் திறனை அதிகரிக்க, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவனத்தின் நிர்வாகம், சந்தைப்படுத்துதல், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி ஆகிய முக்கிய நடவடிக்கைகளை மாற்றியமைத்து புதிய தொழில்நுட்ப முறையில் செயல்பட்டு வருகிறது. இது பல்வேறு வகையான பங்குதாரர்களை மையப்படுத்தி கீழ்க்கண்ட வளர்ச்சிக் குறிக்கோள்களை கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.


- **கைவினைஞர்கள்:** கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பை உருவாக்கியதன் மூலம் அவர்களின் விவரங்கள், பணித்திறன் மற்றும் படைப்புகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கைவினைஞர்களை நேரடியாக தொடர்புகொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் சரியான முறையில் பெண் கைவினைஞர்கள் மற்றும் நலிவுற்றோருக்கு சென்றடைய முன்னுரிமை வழங்கப்படும். புதிய வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி தொழில் நுட்பங்களை புகுத்தி கைவினைஞர்களின் திறனை மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.

- **வாடிக்கையாளர்கள்:** மேம்பட்ட வர்த்தக பரிவர்த்தனை உத்திகள் மற்றும் நுட்பமான அணுகுமுறை போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள் / வாங்குவோரின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துதல்.

- **துறையின் பங்கு:** கைவினைஞர்களுக்கு பாதுகாப்பான வாழ்வாதாரத்துடன், பாரம்பரிய தொழில்துறையின் வணிக நிலைத்தன்மை மற்றும் ஊக்குவிப்பு மற்றும் மின் ஆளுமை மூலம் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்.

## 14.1. நிர்வாக சீர்த்திருத்தங்கள்

**மின் தளம்:** பூம்புகார் தனக்கென உருவாக்கியுள்ள பல்நோக்கு இணையதளமான www.poompuhar.com வாயிலாக பூம்புகார் மற்றும் அதன் தொடர்புடைய பிரிவுகளின் வளர்ச்சியினை தொழில் முனைவோர் அறிந்து கொள்ளலாம்.




**பூம்புகார் மின் வணிக தளம்**

**மின் வருகைப்பதிவு:** இந்நிறுவனத்தின் அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களிலும் பயோ மெட்ரிக் வருகை பதிவு பயன்படுத்தப்படுகிறது.

**மின்தொடர்பு:** வாடிக்கையாளர்கள் மற்றும் அலுவலர்கள் பயன்பாட்டிற்காக தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் நிறுவன வள திட்டத்தின் உபயோகம் (ERP) மற்றும் வை–பை (wi–fi) வசதி செய்யப்பட்டுள்ளது.

**மின் கண்காணிப்பு:** 12 பிரதான விற்பனை நிலையங்கள், 4 துணை விற்பனை நிலையங்கள், 7 உற்பத்தி நிலையங்கள், நகர்புறக் கண்காட்சித்திடல் மற்றும் நிறுவன அலுவலகத்திலும் 142 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து இடங்களும் சரியான முறையில் தலைமை அலுவலகத்தால் கண்காணிக்கப்படுகின்றன.

## 14.2. சந்தை வாய்ப்பில் சீர்த்திருத்தங்கள்

**மின் வணிகம்:** பூம்புகார் தனது பொருட்களை நேரடியாக மின் வணிகம் (Online) மூலம் விற்பனை செய்வதற்கு www.poompuhar.com என்ற பெயரில் சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. இந்நிறுவனம் மின் வணிக நிறுவனங்களான அமேசான் (Amazon), பிளிப்காட் (Flipkart) மற்றும் பிற நிறுவனங்கள் மூலம் தனது தயாரிப்புகளின் விற்பனை மேற்கொள்கிறது. மேற்கண்ட அனைத்து வலைதளங்களிலும் பிரத்யேக மின்வலை தள பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.






**அமேசான் மின் வணிகம்**

**பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் (Virtual Reality Poompuhar Showroom):**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் இந்த மெய்நிகர் தோற்ற தொழில் நுட்பத்தை நிறுவியுள்ளது. தலைமை அலுவலகத்தில் உள்ள வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையக் குழுவினர், பூம்புகார் படைப்புகளை மெய் நிகர் தொழில் நுட்பம் மூலம் முப்பரிமாண வடிவில் உருவாக்கி, முப்பரிமாண அச்சு எந்திரம் வாயிலாக அச்சடிக்கப்பட்டு, பின் அவை பஞ்சலோக சிற்பங்களாக பூம்புகார் உற்பத்தி

நிலையங்களில் தயாரிக்கப்படுகின்றன. அந்த பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக வடிவமைப்புக்குழு தயாரித்து, அதனை மெய்நிகர் தோற்ற இணையகத்தில் (Virtual Reality Server) நிறுவப்படுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் அந்த முப்பரிமாண பொருட்களை தங்களது மெய் நிகர் தோற்றக் கரங்களால் தேர்ந்தெடுத்து, அப்பொருள் குறித்த தங்களது கருத்துகளை பதிவு செய்யவும், அப்பொருட்களை மின் வணிக வர்த்தகம் மூலம் கொள்முதல் செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.







மெய்நிகர் தோற்றக் காட்சி

**உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலி (Augmented Reality App):**

இந்நிறுவனம் உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலி (Augmented Reality App) என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. கைவினைப் பொருட்களை முப்பரிமாணத்தில் காட்சிப்படுத்தி, உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலியின் மூலம் வீடு/தேவைப்பட்ட இடங்களில் அலங்கரித்துக் காட்டி கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்களின் வாங்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கலாம்.



உருப்பெருக்க மெய்தோற்றக் காட்சி

**மின் ஊடகங்கள்:** பூம்புகார் முகநூல், டுவிட்டர், யூடியூப் (Youtube) மற்றும் இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற பிரம்மாண்ட இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்யவும், உலகளவில் சந்தை வாய்ப்பை பெறவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

**மின் குறியீடு:** பூம்புகாரின் 12 பிரதான விற்பனை நிலையங்கள் மற்றும் 10 துணை விற்பனை நிலையங்களிலுள்ள கைவினைப் பொருட்கள் அனைத்திற்கும் மின்னணு விலைக் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

**மின் விலைச்சீட்டு:** பூம்புகார் மின் விலைச்சீட்டு இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் 12 பிரதான விற்பனை நிலையங்கள் மற்றும் 10 துணை விற்பனை நிலையங்களிலும் பரவலாக்கப்பட்ட மின் விலைச் சீட்டினை சுலபமாகவும், விரைவாகவும், தயாரிக்க இயலுவதுடன் வர்த்தக பரிமாற்ற நேரமும் குறைந்துள்ளது.

## 14.3. வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் சீர்திருத்தங்கள்

**வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC)**

பூம்புகார் நிறுவனம் முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இக்காலத்திற்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகளை முப்பரிமாண மென்பொருட்களை உபயோகப்படுத்தி கைவினைப் பொருட்களை தயார் செய்கிறது.

10.09.2021 அன்று பெரும் புலவன் பாரதியார் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெரும்புலவன் பாரதியார் அவர்களின் உருவச்சிலையை உற்பத்தி செய்து அதனை பொதுமக்கள் பயன்பெறும் விதமாக குறைந்த விலையில், பூம்புகார் மூலம் விற்பனை செய்யப்படும் என்று அறிவித்தார்கள்.

இதனை செயல்படுத்தும் விதமாக பூம்புகார் நிறுவனம் வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையத்தின் மூலமாக முப்பரிமாண அச்சு தொழில்நுட்ப உதவியுடன் மகாகவி பாரதியார் அவர்களின் உருவச்சிலைகள் மற்றும் நினைவுப் பரிசுகளை குறைந்த விலை மற்றும் பல அளவுகளிலும், பல்வேறு கைத்திறத் தொழிலிலும் (காகிதக்கூழ் பொம்மைகள், களிமண் பொம்மைகள், பித்தளை கலைப்பொருட்கள், தஞ்சாவூர் கலைத்தட்டுகள், மரச்சிற்பங்கள் மற்றும் பிற) உற்பத்தி செய்து தமிழ்நாடு மற்றும் பிற மாநிலத்திலுள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.



மகாகவி பாரதியார்



அசோக ஸ்தூபி



டாக்டர் **A.P.J.** அப்துல்கலாம்

15. "விருப்ப கொள்முதல் முகமை"

அரசு துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 பிரிவு 16 (f)ன் கீழ் ஒரு **"விருப்ப கொள்முதல் முகமை"** (Optional Procurement Agency) என அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதற்கான அரசாணை (நிலை) எண்.66, நாள் 04.03.2016–இன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 16. கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு

புவிசார் குறியீடு பதிவு மற்றும் பாதுகாப்பு சட்டம், 1999– சட்டத்தின்படி மற்றும் 2002 சட்டவிதிகளின்படி புவிசார் குறியீடு அங்கீகாரம் நம் நாட்டில் வழங்கப்படுகிறது.

கீழ்க்கண்ட தமிழக கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது.

1. நாச்சியார்கோயில் பித்தளை விளக்குகள்
2. பத்தமடை பாய்கள்
3. தோடா சித்திரத் தையல்
4. மாமல்லபுரம் கற்சிற்பங்கள்
5. சுவாமிமலை பஞ்சலோகச் சிலைகள்
6. வடசேரி கோயில் நகைகள்
7. தஞ்சாவூர் கலைத்தட்டுகள்
8. தஞ்சாவூர் ஓவியங்கள்
9. தஞ்சாவூர் பொம்மைகள்

மேலும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தொடர் முயற்சியின் காரணமாக, கீழ்க்கண்ட கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பதிவகம் மூலம் பெறப்பட்ட புவிசார் குறியீடு அங்கீகார சான்றிதழ்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று வெளியிடப்பட்டது.

1. கள்ளக்குறிச்சி மரச்சிற்பம்
2. கருப்பூர் கலம்காரி ஓவியம்
3. தஞ்சாவூர் நெட்டி வேலை
4. அரும்பாவூர் மரச்சிற்பம்

இந்த புவிசார் குறியீட்டின் மூலம் தமிழக கைவினைஞர்களின் படைப்புகள் உலகளவில் கொண்டுச்சென்று சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையப்பெறும்.



**கைத்திறத் தொழில்களுக்கான புவிசார் குறியீடுகளின் அங்கீகார சான்றிதழ்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று வெளியிடப்பட்டது.**

## 17. கைவினை கலைஞர்களுக்கான நலத்திட்டங்கள்

மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன், பூம்புகார் நிறுவனம் கைவினைக் கலைஞர்களுக்கான நலத்திட்டங்களையும், சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இந்நலத்திட்டங்களை அமல்படுத்திட மேம்பாட்டு பிரிவு (Development Cell) என்ற தனி பிரிவு செயல்பட்டு வருகிறது.

### 17.1. மாநில விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கைத்திறத் தொழிலில் சிறந்த திறமைக் கொண்ட கைவினைஞர்களை அங்கீகரிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட விருதுகளை வழங்குகின்றது:–

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது
2. பூம்புகார் மாநில விருது
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது
4. பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது
5. கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது
6. குழு உற்பத்தி விருது
7. அடுத்த தலைமுறை கைவினைஞருக்கான கைத்திறப்போட்டி

போன்ற விருதுகளை கைத்திறத் தொழிலில் சிறந்த திறமைக் கொண்ட கைவினைஞர்களுக்கு வழங்கி அங்கீகரிக்கப்படுகிறது.

**விருதுகளின் விவரங்கள்**

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | ரூ.1.00 இலட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.10,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 85 |
| 4 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 2 |

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |
| 6 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/– ரொக்கம்,4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர் –களுக்கான கைத்திறப் போட்டி | ரூ.2,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | **மொத்தம்** | | 263 |

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவமிக்க மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது" 13.04.2022 அன்று வழங்கப்பட்டது



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "பூம்புகார் மாநில விருது" 13.04.2022 அன்று வழங்கப்பட்டது

### 17.2. கைவினைஞர்கள் தினம்

பொது மக்களிடையே கைவினைப்பொருட்களை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கைவினைஞர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவும் மற்றும் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் பொருட்டும் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் **"மார்ச் 5–ஆம்"** நாள் **"கைவினைஞர்கள் தினம்"** என அறிவித்துள்ளது. இந்த தினத்தன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு பூம்புகார் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறும். இதற்காக தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ.35.00 இலட்சம் நிதியுதவி வழங்குகிறது.

### 17.3. ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டம்

ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.10.19 கோடியினை பூம்புகாருக்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.3.24 கோடி இணை மானியமாக தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணிச்சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டக் கூறுகள்**

| வ. எண் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டம் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | செலவினத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் | 11 | 5.40 |
| 2. | கண்காட்சி | 22 | 3.13 |
| 3. | கிராப்ட்பஜார் | 12 | |
| 4. | வடிவமைப்பு கருத்தரங்கு | 27 | 1.23 |
| 5. | ஒருங்கிணைந்த பயிற்சி | 5 | 0.68 |
| 6. | உபகரணப் பொருட்கள் | 6,212 | 2.69 |
| 7. | உற்பத்தியாளர்/ நுகர்வோர் கூட்டம் | 1 | 0.11 |
| | **மொத்தம்** | | **13.24** |

இந்த பெரும் கைவினை மேம்பாட்டு திட்டம் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு உள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் இத்திட்டம் தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாகவும், போற்றும்படியாகவும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 17.4. பொது வசதி மையங்கள்

பல கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொது வசதி மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதி, அங்குள்ள நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மூலம் கைவினைப்பொருட்களை தயாரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம்–காகிதக்கூழ் பொம்மைகள், அரும்பாவூர்–மரச்சிற்பங்கள், தம்மம்பட்டி–மரச்சிற்பங்கள், அம்பாசமுத்திரம்–மரவர்ணக் கடைசல் மற்றும் ஆசனூர்–ஒன்னிக்குச்சி ஆகிய கைத்திறத் தொழில்களுக்கான 5 பொது வசதி மையங்களை துவக்கி வைத்தார்கள், இப்பொது வசதி மையங்களில் உற்பத்தியை அதிகரிக்க நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இவைகள் தலா ரூ.60.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது வசதி மையங்கள் 13.04.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.**

மேலும் 6 பொது வசதி மையங்கள் சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை, வாகைக்குளம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இப்பொது வசதி மையங்களின் மூலம் தோராயமாக 5,000 கைவினைஞர்கள் பயன்பெறுவார்கள்.



அரும்பாவூர் மரச்சிற்ப கைத்திறத் தொழிலுக்கு பொது வசதி மையம்



மதுரை பித்தளை கலைப்பொருட்களுக்கான பொதுவசதி மையம்

## 17.5. நலிந்த கைத்திறத் தொழில்களுக்கு பொது வசதி மையங்கள் அமைத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நலிந்த கைத்திறத் தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் கோரைப்பாய்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் களிமண் பொம்மைகள் கைத்திறத் தொழிலுக்கான இயந்திரங்களுடன் கூடிய இரண்டு பொது வசதி மையங்களை துவக்கி வைத்தார்கள். இப்பொது வசதி மையங்கள் தலா ரூ.47.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.



**நலிந்த கைத்திறத் தொழிலான சுடுகளிமண் கைவினைப் பொருளுக்கு பொது பயன்பாட்டு மையம் – விக்கிரவாண்டியில் அமைக்கப்பட்டுள்ளது.**

17.6. **இலவச உபகரணங்கள் வழங்குதல்**

கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் இந்நிறுவனம் ரூ.5,000/– மதிப்பிலான உபகரணங்களை கைவினைஞர்களுக்கு இலவசமாக வழங்குகிறது. தமிழ்நாட்டிலுள்ள 6,212 பல்வேறு கைத்திறத் தொழில் புரியும் கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

17.7. **பயிற்சி திட்டங்கள்**

ஒன்றிய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் IDPH (Integrated Development and Promotion of Handicrafts) கீழ் 40 கைவினைஞர்களுக்கு ரூ.14.85 இலட்சம் செலவில் தஞ்சாவூர் (கலைத்தட்டு), நாச்சியார்கோவில் (பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்) மற்றும் தம்மம்பட்டி (மரச்சிற்பம்) ஆகிய கைத்திறத் தொழில்களில் 3 மாத கால கைத்திறத்தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 200 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.



**ஒன்னி குச்சி கைத்திறத் தொழிலுக்கான பயிற்சி – ஆசனூர்**

## 17.8. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி முகாம்

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு முழுவதும் 27 இடங்களில் தலா ரூ.4.60 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 810 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

## 17.9. நகர்ப்புற கண்காட்சித் திடல்கள்

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக்

கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடல், உள்நாடு / சர்வதேச சுற்றுலா பயணிகள்/ நுகர்வோர்களை கவரும் வகையில் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

17.9. (அ) **கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்**

கன்னியாகுமரியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் ஒரு நகர்ப்புறக் கண்காட்சித் திடலை வர்த்தக உட்கட்டமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சித் திடல் 50 கடைகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நகர்ப்புற கண்காட்சித்திடல் மூலம் மாதந்தோறும் சராசரியாக 100 கைவினைஞர்கள் பயன்பெறுகின்றனர்.



**கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்**

## 17.9. (ஆ) மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்

இதேபோன்று மற்றுமொரு நகர்ப்புற கண்காட்சித்திடல் சென்னையை அடுத்து மாமல்லபுரத்தில் ரூ.4.25 கோடி செலவில் வர்த்தக கட்டமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. இக்கண்காட்சி திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 50 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் கொண்டதாகும்.





**மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்**

## 17.10. கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village)

ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அபிவிருத்தி ஆணையம் (கைவினைப் பொருட்கள்) சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் கைவினை சுற்றுலா கிராமம் என்ற ஒரு திட்டத்தை ரூ.5.61 கோடி செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) மூலம் அப்பகுதியிலுள்ள கைவினைஞர்கள் நலனுக்காகவும், சுற்றுலா மேம்பாட்டிற்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### இத்திட்டத்தின் நோக்கம்

மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள தொன்மையான மற்றும் நலிந்த கைவினைஞர்களின் குடியிருப்புகளை சீர்செய்து, மேம்படுத்தி தேவைக்கேற்ப அழகுபடுத்தி அவர்கள் வசிக்கும் இடங்களை, சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும், அவர்களிடம் நேரடியாக தொடர்பு கொள்ள வழிவகுத்திட இத்திட்டம் உருவாக்கப்பட உள்ளது. மேலும், மாமல்லபுரத்தை சுற்றியுள்ள கற்சிற்ப உற்பத்தி நிலையங்களை புதுப்பித்து / மேம்படுத்தி அங்கு வேலைபுரியும் கைவினைஞர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து, அங்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளிடம், மாமல்லபுரத்தை சார்ந்த கைவினைக் கலைஞர்கள் வணிகம் செய்திட இத்திட்டம்

வழிவகை செய்யும். மேலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 40 அடி உயரத்தில் ஸ்தூபி ஒன்று மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக ரூ.1.80 கோடி செலவில் மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

- காரணை கிராமத்தில் உள்ள 27 கைவினைஞர்களின் குடியிருப்புகள் அழகுபடுத்துதல், வர்ணம் பூசுதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் முடிவடைந்துள்ளது.

- ஐந்துரத வீதியில் உள்ள 34 கைவினைஞர்களின் உற்பத்தி நிலையங்கள் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரமாண்டமான ஸ்தூபி அமைக்கப்பட்டு வருகிறது.

- கைவினை சுற்றுலா கிராமத்திற்கான விளம்பர பதாகைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பல்வேறு இடங்களில் அமைத்தல்.

- காரணை கிராமத்திற்கான முகப்பினை அழகுபடுத்துதல்.



**கைவினை சுற்றுலா கிராமம்**

## 17.11. மின் தொகுப்பு களஞ்சியம்

தமிழ்நாட்டின் கைவினைக் கலைஞர்களுக்காக பூம்புகார் நிறுவனம் "கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு களஞ்சியம்" என்ற வலைதள இணைய முகப்பை www.poompuhar.com, www.tnartisaan.com என்ற இணைய வலை தளத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்டது.

இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வலைதளம் அமைத்து ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனித்தனியாக மின் பக்கங்களை கொண்ட, விரிவாகவும் தொடர்ந்து புதிய தகவல்களை பதிவேற்றம் செய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம்மின்

தொகுப்பில் நலிவுற்ற கைவினைஞர்களை மேம்படுத்தும் பிரத்யேக அம்சங்களும் அடங்கும். தற்போது இந்நிறுவனம் 22,000 கைவினைஞர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களின் வகைகள் வாரியாகவும், கைவினைஞர்களின் வேலைப்பாடுகளையும் இவ்வலைத்தளம் மூலம் காண இயலும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள், கைவினைஞர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக கணினி மூலம் பெறவும் கைவினைப் பொருட்களை வாங்கவும் முடியும்.

### 17.12. மாமல்லபுரம் – ஓர் உலக கற்சிற்ப நகரம்

பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியால், மாமல்லபுரத்தை "உலக கற்சிற்ப நகரம்" என்று உலக கைத்திற குழுமம் (World Crafts Council) அங்கீகரித்துள்ளது. இது மாமல்லபுர கற்சிற்ப கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.

## 18. அறிவிப்புகள்

### 18.1. பூம்புகார் நிறுவனத்தின் பொன் விழா ஆண்டு சிறப்பாக கொண்டாடுதல்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு "பூம்புகார்" என்ற வர்த்தகப் பெயரில் 1973–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

கைவினைப் பொருட்களின் தனித்துவத்தையும், தொன்றுதொட்டு வரும் கலாச்சாரப் பெருமையையும் அதன் முக்கியத்துவத்தையும் பொது மக்கள் அறியும் பொருட்டு சிறந்த ஒரு விழிப்புணர்வை இந்நிறுவனம் ஏற்படுத்தி வருகிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழக கைவினைக் கலைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்நிறுவனம் துவங்கி 2023–ஆம் ஆண்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்து பொன்விழாவை காண உள்ளது. இந்த பொன்விழா ஆண்டை மிகச் சிறப்பாக கொண்டாடும் விதமாக மாநில அரசு ரூ.1.00 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

### 18.2. பூம்புகார் கைவினைப் பொருட்களின் உற்பத்தி நிலையங்கள் மேம்படுத்துதல்

பூம்புகாரின் சொந்த 7 உற்பத்தி நிலையங்கள் நாச்சியார்கோவில், மதுரை, வாகைக்குளம், சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இந்த உற்பத்தி நிலையங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், தமிழக அரசின் நிதியுதவி ரூபாய் 3.50 கோடி செலவில் அவற்றை சீரமைக்கவும், கைவினைஞர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

**18.3. சென்னை, கோயம்புத்தூர், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய 4 பூம்புகார் விற்பனை நிலையங்கள் புதுப்பித்தல்**

பூம்புகாரின் முக்கிய விற்பனை நிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. இவை பழுதடைந்துள்ளதால், இவ்விற்பனை நிலையங்களை புதுப்பித்து மற்றும் அழகுபடுத்தி வாடிக்கையாளர்களை கவரும் வகையில் மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.5.00 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

**18.4. மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புறக் கண்காட்சித் திடல் விரிவாக்கப் பணிகள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மாமல்லபுரம் கடற்கரை சாலையில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.4.25 கோடி செலவில் ஒரு நிரந்தர நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்தும் வகையில் மேலும், 14 விற்பனை அரங்குகள், கைத்திறப் பொருட்கள் செய்முறை விளக்கக்காட்சி அரங்கம் மற்றும் நுழைவு வாயில் அழகு படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாநில அரசு நிதியுதவி ரூபாய் ஒரு கோடி செலவில் அமைக்கப்படும்.

### செய்முறை விளக்கக் காட்சி அரங்கம்

சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புற கண்காட்சிதிடலில் செய்முறை விளக்கக் காட்சி அரங்கம் அமைக்கப்பட உள்ளது. இதில் விற்பனை அரங்குகள், காணொலி காட்சி அரங்கம், செய்முறை விளக்கக் காட்சி அரங்கம், மெய்நிகர் தோற்ற காட்சி அரங்கம் போன்ற அம்சங்களுடன் அமைக்கப்பட உள்ளது. இதன் பணி விரைவில் துவக்கப்பட உள்ளது.




செய்முறை விளக்கக் காட்சி அரங்கம் (மாதிரி)

### 18.5. கடலூர் விற்பனை நிலையம் புதுப்பித்தல்

பூம்புகார், கடலூர் விற்பனை நிலையம் 50 ஆண்டுகளுக்கு மேல் மிகவும் பழமையானதாகும். இந்த விற்பனை நிலையம் கடலூரில் முக்கிய வர்த்தக மையங்கள் அமைந்திருக்கும் பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வருவாய் ஈட்டும் தன்மையுடையது. எனவே, இந்த மாவட்டம் மற்றும் அதை

சுற்றியுள்ள கைவினைஞர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் இந்த இடத்தில் புதிய விற்பனை நிலையம் ரூ.1.00 கோடி செலவில் உள் அலங்காரத்துடன் கட்டப்பட உள்ளது.

### 18.6. சேலத்தில் புதிய விற்பனை நிலையம் அமைத்தல்

பூம்புகார் விற்பனை நிலையம், சேலம் கிளை வாடகை கட்டடத்தில் மிகவும் சிறிய இடத்தில் இயங்கி வருகிறது. இந்த விற்பனை நிலையத்தை தேவைக்கு ஏற்ப புதுப்பிக்கவோ, விரிவாக்கம் செய்யவோ இயலாததால், ஒரு புதிய விற்பனை நிலையத்தை தனது சொந்த இடத்தில் அமைத்திட தமிழக அரசு நிதியுதவி ரூ.2.00 கோடி செலவில் உள் அலங்காரத்துடன் கட்டப்பட உள்ளது.

### 19. தொலைநோக்கு பார்வை

பூம்புகார் நிறுவனம் கைவினைஞர்களை ஊக்குவித்து அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்திட பாடுபடும். மேலும், அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் உற்பத்தி மற்றும் வருவாயினை பெருக்குவதுடன், பூம்புகார் தனது வர்த்தக செயல்பாட்டிலும் மேன்மையடைய சீரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

"கதர் உணர்வு நமக்குள் இருக்குமேயானால் நம் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எளிமை நம்மை சூழ்ந்திருக்கும். கதர் உணர்வு என்பது எல்லையற்ற பொறுமையை குறிப்பதாகும். கதர் உற்பத்தியை பற்றி அறிந்தவர்கள், நூற்போர் மற்றும் நெய்வோர் எந்தளவுக்கு பொறுமையுடன் அவர்களுடைய தொழிலில் பாடுபடுகிறார்கள் என்பதை அறிவார்கள் மற்றும் சுயராஜ்ஜியம் என்ற நூலினை நூற்கும் போது அந்த அளவிற்கு நாம் பொருமையுடன் இருந்ததை அறிகிறோம்.

கதர் உணர்வு என்பது பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உள்ள தோழமை உணர்வாகும். இதன் அர்த்தம் யாதெனில் நம்முடன் இருக்கும் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய ஒவ்வொன்றையும் முழுமையாக துறப்பது மற்றும் நம் நாட்டின் பல இலட்சக்கணக்கான மக்களிடையே அந்த உணர்வினை பண்படுத்தினால் நமது இந்திய நாடு தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும்! நான், நாட்டில் பயணிக்கும் அதிகமான இடங்களிலும், நான், எனக்காக பார்க்கும் அதிக அளவு பொருள்களிலும், நூற்கும்

சக்கரத்தின் செயல்திறன் மீது மட்டுமே எனது நம்பிக்கை பலமாக உள்ளது.

–மகாத்மா காந்தியடிகள்

அண்ணல் காந்தியடிகளின் கோட்பாட்டினை முக்கிய நோக்கமாகக் கொண்டு கிராமப்புறங்களில் கதர் நூற்பு தொழில், நெசவுத் தொழில் மற்றும் கிராமத் தொழில்களை மேம்படுத்திடவும் அப்பொருட்களுக்கு விற்பனை வழிகளை ஏற்படுத்தி தருவதற்காகவும் (தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய சட்டம் 1959–இன்படி) ஏப்ரல், 1960–ல் தமிழ் நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் முக்கியமாக கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திட பெருமிதத்துடன் சேவையாற்றி வருகிறது.

### 1. நோக்கங்கள்

- கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பு நம்பிக்கையினை வளர்த்தல்.
- சுற்றுச்Nழலுக்கு உகந்த கதர் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை பணிகளை செயல்படுத்துதல்.

- கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
- வடிவமைப்புகளில் புதுமையை புகுத்துதல்.

## 2. நிருவாகம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு தலைவராகவும், அரசினால் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் வாரியத்தின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இவ்வாரியத்தின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான முக்கிய கொள்கை முடிவுகள் வாரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகள் வாரிய உறுப்பினராக உள்ள தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

## 3. நிலையான வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளும் அந்தந்த நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக செயல்பட ஒப்புக்கொண்ட 17 வழிகாட்டி இலக்குகளின் தொகுப்பே நிலையான வளர்ச்சி இலக்காகும்.

இலக்கு 8 – மதிக்கத்தக்க வேலை மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குதல்

8.5. உற்பத்தித் திறனுடன் கூடிய வேலைவாய்ப்பை ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உருவாக்குதல்.

கிராமப்புற ஏழை கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல், கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பினை வளர்த்தல், கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தினை மேம்படுத்துதல் ஆகியவை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய நோக்கங்களாகும். நிலையான வளர்ச்சி இலக்கு 8–னை (Sustainable Development Goal No.8) அடையும் பொருட்டு, கிராமப்புற பெண்களுக்கு உகந்த வேலை வாய்ப்பினை வாரியம் வழங்கி வருகிறது.

4. கதர்

இந்திய சுதந்திர இயக்கத்தோடும், சுதந்திர போராட்டத்தோடும் கதர் நெருங்கிய தொடர்பில் இருந்ததால், இந்தியர்களிடையே தேசபக்தி, அமைதி மற்றும் எளிமை உணர்வை ஏற்படுத்துகிறது. கதர், இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வின் வழிமுறைகளை நிலைநிறுத்துவதோடு இந்திய கிராமங்களின் பொருளாதார

வளர்ச்சிக்கு பெருந்துணையாக இருந்து வருகிறது. பருத்தி மற்றும் பாலிவஸ்திரா நூலிருந்து கையினால் இயக்கப்படும் இராட்டைகள் மற்றும் தறிகள் மூலம் கதர் துணிகள் நெய்யப்படுகிறது. கதர் துணிகள் இயற்கையானது, உறுதியானது மற்றும் இந்திய தட்பவெட்ப நிலைக்கு ஏற்றது. உடலுக்கு குளிர்ச்சியை அளிப்பதோடு ஒவ்வாமை மற்றும் எரிச்சல் போன்ற எவ்விதமான பின்விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை.

தற்போது மாறிவரும் சந்தைப் போக்கிற்கு ஏற்ற வகையிலும், பொருளாதார ரீதியில் அலகுகளை இயக்கும் வகையிலும் வெளிச்சந்தையில் கிடைக்கக்கூடிய பொருட்களுடன் போட்டியிடும் வகையிலும் பொருட்களை உற்பத்தி செய்திட வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இவ்வகையான நடவடிக்கைகளின் ஒன்றாக "ஆதிரை கலெக்சன்ஸ்" என்ற பெயரில் பிளாக் பிரிண்ட் முறையில் அச்சிடப்பட்ட பட்டுப்புடைவகள், மெல்லியரக காட்டன் புடவைகள் (Muslin Sarees), புதிய வண்ணக்கலவை மற்றும் வடிவமைப்புகளுடன் கூடிய மெத்தை விரிப்புகள் மற்றும் போர்வை இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

23.10.2021 முதல் மார்ச் 2022 வரை ரூ. 15.02 இலட்சம் மதிப்பிலான 212 ஆதிரை கலெக்சன்ஸ் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 4.1. கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா'

கதர், பட்டு, மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் உற்பத்தியில் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயப்பணிகளின் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படுத்துவதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கியப் பணிகளுள் ஒன்றாகும். வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் 31 கிராமிய நூற்பு நிலையங்களில் நூற்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த கிராமிய நூற்பு நிலையங்களிலிருந்து பெறப்படும் சிட்டங்கள், கோரா துணி உற்பத்தி செய்வதற்காக 23 கதர் உற்பத்தி உபகிளைகள் மூலம் நெசவாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்தி உபகிளைகள் மூலம் 1340 நூற்போர் / நெய்வோர்களுக்கு குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் கதர் வாரியத்தின் கதர் இரகங்களுக்கு அதன் தரத்தை உறுதி செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் "காதி மார்க்" சான்றிதழ் வழங்கப்படுகிறது.

கதர் உற்பத்தி அலகுகள்

## I – கிராமிய நூற்பு நிலையங்கள்

| வ. எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருப்பூர் | பூளவாடி |
| 2. | | பெருமாநல்லூர் |
| 3. | | அவிநாசி |
| 4. | | காதகோட்டை |
| 5. | | கருவலூர் |
| 6. | | வெள்ளக்கோயில் |
| 7. | | இலக்கும நாயக்கன்பட்டி |
| 8. | | கொளத்துப்பாளையம் |
| 9. | | புதுப்பை |
| 10 | | ஓலப்பாளையம் |
| 11. | ஈரோடு | காவிலிபாளையம் |
| 12. | | கெட்டிசெய்யூர் |
| 13. | சேலம் | விருதாசம்பட்டி |
| 14. | | நார்த்தம்பட்டி |
| 15. | கோயம்புத்தூர் | சூலூர் |
| 16. | திருச்சி | கருங்குளம் |
| 17. | கரூர் | தென்னிலை |
| 18. | நாமக்கல் | நாமக்கல் |
| 19. | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி |
| 20. | | நரிக்கல்பட்டி |
| 21. | புதுக்கோட்டை | திருவரங்குளம் |
| 22. | மதுரை | அன்னமார்பட்டி |
| 23. | இராமநாதபுரம் | கே.எம்.கோட்டை |

| வ. எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 24. | விருதுநகர் | வண்ணியம்பட்டி |
| 25. | | ஆர்.என்.பட்டி |
| 26. | | மங்காபுரம் |
| 27. | தென்காசி | பாவூர் சத்திரம் |
| 28. | | பெருமாள்பட்டி |
| 29. | கன்னியாகுமரி | அகத்தீஸ்வரம் |
| 30. | | தேவிகோடு |
| 31. | | முதலாறு |



கண்டனூர் கிராமிய நூற்பு நிலையம்

## II – கதர் உபகிளைகள்

| வரிசை எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருப்பூர் | பூளவாடி |

| வரிசை எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 2. | திருப்பூர் | அவிநாசி |
| 3. | | கொளத்துப்பாளையம் |
| 4. | | கன்னிவாடி |
| 5. | | வெள்ளக்கோயில் |
| 6. | | ஓலப்பாளையம் |
| 7. | | ஆண்டிப்பாளையம் |
| 8. | ஈரோடு | காவிலிபாளையம் |
| 9. | | மூங்கில்பட்டி |
| 10 | | கெட்டிசெய்யூர் |
| 11. | கோயம்புத்தூர் | சூலூர் |
| 12. | சேலம் | காட்டாம்பட்டி |
| 13. | கரூர் | கரூர் |
| 14. | | தென்னிலை |
| 15. | நாமக்கல் | நாமக்கல் |
| 16. | திண்டுக்கல் | நரிக்கல்பட்டி |
| 17. | | சின்னாளப்பட்டி |
| 18. | மதுரை | உசிலம்பட்டி |
| 19. | இராமநாதபுரம் | கமுதி |
| 20. | விருதுநகர் | வத்திராயிருப்பு |
| 21. | தென்காசி | கீழப்பாவூர் |
| 22. | கன்னியாகுமரி | பொட்டல் |
| 23. | | மார்த்தாண்டம் |



**கண்டனூர், கால் மிதியடி உற்பத்தி அலகு**

வாரிய அலகுகளில் கதர் பருத்தி, பாலிவஸ்திரா இரகங்களான வேட்டிகள், சட்டைத் துணிகள், புடவைகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடை துணிகள் மற்றும் இதர ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இவ்வலகுகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கதர் இரகங்கள் 48 கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.


2019–2020 முதல் 2021–2022 வரை கதராணைக்குழு மற்றும் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பட்டைப் பஞ்சு, பணியாற்றிய நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட கூலி

மற்றும் துணி உற்பத்தி மதிப்பு ஆகிய விபரங்கள் பின்வருமாறு:–

| வருடம் | பட்டை பஞ்சு கொள்முதல் | | நூற்பாளர்கள் | | நெசவாளர்கள் | | துணி உற்பத்தி மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | கிலோ | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பணியாற்றுபவர் (எண்ணிக்கை) | கூலி வழங்கியது (ரூ. இலட்சத்தில்) | பணியாற்று–பவர் (எண்ணிக்கை) | கூலி வழங்கியது (ரூ. இலட்சத்தில்) | |
| 2019–2020 | 54,727 | 101.24 | 1,367 | 105.12 | 311 | 62.23 | 477.13 |
| 2020–2021 | 3,780 | 7.77 | 1,116 | 83.18 | 224 | 44.82 | 377.59 |
| 2021–2022 | 57,505 | 120.20 | 1049 | 115.00 | 291 | 76.23 | 569.90 |

கடந்த மூன்று ஆண்டுகளில் கதர் அலகுகளில் நடைபெற்ற உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் பின்வருமாறு விளக்கப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது:–

(மதிப்பு ரூ.இலட்சத்தில்)



## 4.2. கதர் பட்டு

வரலாற்று காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் பழம் பெருமை வாய்ந்த தொழிலின் அடையாளமாக பட்டுத்தொழில் விளங்குகிறது. 8 கதர்பட்டு உற்பத்தி அலகுகள் மூலம் பாரம்பரியம் வாய்ந்த பட்டு புடவைகள் தூய வெள்ளி சரிகை மற்றும் புதிய வடிவமைப்புகளுடன் தயாரிக்கப்பட்டு கதரங்காடிகளின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

நுகர்வோர் விரும்பத்தக்க வகையில் தரமான பட்டுபுடவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டு துண்டுகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

கீழ் குறிப்பிட்ட கதர் பட்டு உபகிளைகள் மூலம் 277 நெசவாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | மாவட்டம் | கதர் உபகிளைகள் |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | கும்பகோணம் |
| 2. | | கபிஸ்தலம் |
| 3. | | அம்மாப்பேட்டை |
| 4. | திண்டுக்கல் | நரிக்கல்பட்டி |
| 5. | சேலம் | சேலம் |
| 6. | | தாரமங்கலம் |
| 7. | தருமபுரி | கெலமங்கலம் |
| 8. | கோயம்புத்தூர் | வடவள்ளி |




**கும்பகோணம் பட்டு உற்பத்தி தறி.**

வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளுக்கு மத்திய பட்டுவாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு சான்றாக "சில்க் மார்க்" முத்திரை வழங்கப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கதர் பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

**(மதிப்பு ரூ.இலட்சத்தில்)**



## 4.3. நலத்திட்டங்கள்

### 4.3.1 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நல வாரியம் அமைக்கப்பட்டு கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நலவாரியத்தில் தற்பொழுது 8,678 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

### இந்நலவாரியத்தால் வழங்கப்படும் பல்வேறு உதவிகள் பின்வருமாறு:

| வ. எண். | உதவிகளின் விவரம் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| | a | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000/- |
| | b | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000/- முதல் 1,00,000/- வரை |
| 2 | | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/- |
| 3 | | ஈமச்சடங்கு செலவு | 2,000/- |
| 4 | | கல்வி உதவித் தொகை | |
| | a | 10-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | b | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/- |

| வ. எண். | | உதவிகளின் விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| | c | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | d | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| | e | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| | f | முறையான பட்டப்படிப்பிற்கு | 1,500/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750/– |
| | g | முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 3,000/– |
| | h | தொழில் கல்வி பட்டப்படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000/– |
| | i | தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 4,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டமேற்படிப்பிற்கு | 6,000/– |
| | j | ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,000/– |
| | | விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,200/– |
| 5 | | திருமண உதவித் தொகை | 2,000/– |
| 6 | | மகப்பேறு உதவித் தொகை | |
| | a | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள் மகப்பேறுக்குப் பின் 3 மாதங்கள்) | 6,000/– |
| | b | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/– |

| வ. எண். | உதவிகளின் விவரம் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 7 | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/- வரை |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000/- |

இதன் மூலம் 1,294 பயனாளிகளுக்கு ரூ.67.98 இலட்சம் மதிப்பிலான நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.3.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி

நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு பண்டிகை காலம், கல்வி செலவினம், மருத்துவம் மற்றும் திருமணச் செலவுகளுக்கு தேவையான நிதியுதவி வழங்கும் பொருட்டு அவர்களது கூலியிலிருந்து 12% பிடித்தம் செய்து, வாரியமும் அதற்கு ஈடான பங்கு தொகையை வழங்கி ஓர் நலநிதி அமைக்கப்பட்டுள்ளது.

இந்நலநிதியிலிருந்து 2021-2022 ஆம் ஆண்டிற்கு 1458 நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு ரூ.14.79 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.3.3. மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டம்

மண்பாண்டத் தொழில் தமிழகத்தின் பண்டைகாலத் தொழில்களில் ஒன்றாகும். இத்தொழில், கிராமப்புறங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம், பொருளாதார நிலையை மேம்படுத்த உதவுகிறது.

மழைக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களின் இன்னல்களை போக்கிட மழைக்காலப் பராமரிப்புத் தொகை கீழ் குறிப்பிட்டவாறு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வருடம் | மழைக்காலப் பராமரிப்புத் தொகை | பயனடைந் தோர் எண்ணிக் கை | மொத்த தொ கை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 2019-2020 | ரூ.5000/- | 12,052 | 6,02,60,000 |
| 2. | 2020-2021 | ரூ.5000/- | 11,957 | 5,97,85,000 |
| 3. | 2021-2022 | ரூ.5000/- | 11,822 | 5,91,10,000 |

அதுமட்டுமின்றி, 4,000 மண்பாண்ட குடும்பங்களுக்கு மின்சாரத்தால் இயங்கும் மட்பாண்ட சக்கரம் ஒன்றின் மதிப்பு ரூ.20,400/- வீதம் 4,000 'சீலாவீல்' இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மேலும், 2,000 'சீலாவீல்' மின் சக்கரங்கள் உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5. வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA)


**"வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தினை"** (MDA) 2010–2011 முதல் கதர் கிராமத் தொழில் ஆணையம் கதர் உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் அறிமுகப்படுத்தியது.

2016–2017–ம் ஆண்டு முதல் வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம் என்பதை, திருத்திய வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம் (MMDA) என மாற்றம் செய்து கதர் உற்பத்தி செலவின மதிப்பில் 30 விழுக்காடு கீழ்க்கண்டவாறு பங்கிட்டு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | **நூற்போர் / நெசவாளர்களுக்கான ஊக்கத் தொகை** | 30% |
| 2. | **கைவினைஞர்களுக்கான ஊக்கத் தொகை** | 10% |
| 3. | **உற்பத்திக்கான உள்கட்டுமானம் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக (உற்பத்தி நிறுவனங்களுக்காக)** | 20% |
| 4. | **விற்பனை உட்கட்டமைப்பு கணினி மயமாக்கல் உள்பட (உற்பத்தி நிறுவனங்களுக்காக)** | 20% |
| 5. | **வணிகம் மற்றும் விற்பனை மேம்படுத்துதல் (விற்பனை நிறுவனங்களுக்காக)** | 20% |

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மற்றும் 69 சர்வோதய சங்கங்களின் உற்பத்திப் பணியில் ஈடுபடும் நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு 30 விழுக்காடு ஊக்கத் தொகையும், கைவினைஞர்களுக்கு 10 விழுக்காடு ஊக்கத்தொகையும் கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் ஒவ்வொரு காலாண்டிற்கும் தனியரின் வங்கி கணக்கிற்கு மின்னணுத் தீர்வை மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. வழங்கப்பட்ட விவரம் கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 60 விழுக்காடு (வரிசை எண் 3,4 மற்றும் 5 ஒவ்வொன்றுக்கும் 20 விழுக்காடு) சர்வோதய சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கணக்கில் உற்பத்தி உள்கட்டுமானம் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, விற்பனை உட்கட்டமைப்பு கணினி மயமாக்கல் மற்றும் வணிக மேம்பாடு போன்றவற்றிற்காக கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் வரவு வைக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவியின் விவரம்:–

**கதராணையத்திலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)**




இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசும், வணிக அபிவிருத்தி நிதியுதவியாக கதர் உற்பத்தி செலவின மதிப்பின் மீது 20 விழுக்காடு எனக் கணக்கிட்டு அனைத்து சர்வோதய சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கும் வழங்கி வருகிறது. சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பு ரூபாய் 30 கோடியாகவும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பு ரூபாய் 4 கோடியாகவும் அரசால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

## 6. கிராமத் தொழில்கள்

கதர் வாரியம், கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஊரக பகுதியில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும் மனித சக்தியையும் பயன்படுத்தி, வறுமையை அகற்றுவதற்கு கிராமத்தொழில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தச்சு மற்றும் கருமாரம், தோல் பொருட்கள், சோப்பு உற்பத்தி, கைமுறைகாகிதம், தேனீவளர்ப்பு ஆகிய பல்வேறு தொழில்களுக்கு வாரியம் ஊக்கமளித்து வருகிறது.

மாநிலம் முழுவதும் உள்ள சில்லறை விற்பனை நிலையங்கள், அரசு, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொது விநியோக திட்டத்தின் மூலம் இப்பொருட்களின் விற்பனையினை ஊக்குவித்து அபிவிருத்தி செய்திட வாரியம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 6.1 சோப்பு அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 7 குளியல் சோப்பு அலகுகள், 2 பார் சோப்பு அலகுகள், 2 டிடர்ஜெண்ட் சோப்பு அலகுகள் உள்ளன. கீழ்குறிப்பிட்ட மாவட்டங்களில் மொத்தம் 11 சோப்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. வாரியத்தின் வருவாயில் சோப்புத் தொழில் பெரும் பங்கு வகிக்கிறது.

## I – குளியல் சோப்பு அலகுகள்

| வ.எண். | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் |
| 2. | | மாமண்டூர் |
| 3. | திருச்சி | சமயபுரம் |
| 4. | தஞ்சாவூர் | நாஞ்சிக்கோட்டை |
| 5. | ஈரோடு | மொடக்குறிச்சி |
| 6. | சிவகங்கை | கண்டனூர் |
| 7. | கன்னியாகுமரி | மயிலாடி |

## II – பார் சோப்பு அலகுகள்

| வ.எண். | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | பூண்டி |
| 2. | நாமக்கல் | திருச்செங்கோடு |

## III – டிடெர்ஜென்ட் சோப்பு அலகுகள்

| வ.எண். | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி | காவேரிபட்டினம் |
| 2. | கடலூர் | பண்ருட்டி |

இந்த சோப்பு அலகுகளில் குமரி, மூலிகா, நித்தம், வேம்பு, சந்தனம், கார்பாலிக், சுகந்தம் மற்றும் பொய்கை போன்ற குளியல் சோப்பு வகைகள் 7 குளியல் சோப்பு அலகுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

"கோபுரம்" என்னும் வணிகக் குறியீட்டுடன் கிளீனிங் பவுடர், டிடர்ஜெண்ட் சோப்பு, டிடர்ஜெண்ட் சலவைத் தூள் மற்றும் பார் சோப்பு போன்றவைகள் பிற 4 சோப்பு அலகுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

வாரிய சோப்புகள் தரமாகவும், விலை மலிவாகவும் உள்ளதால் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. (தற்போது வாரிய சோப்பு வகைகளை இணையவழி மூலம் விற்பனை செய்வதுடன் மொத்த விற்பனை முகவர்களை நியமித்து மாநிலத்திலுள்ள பல்பொருள் அங்காடிகளில் (Departmental Stores) விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது).



மொடக்குறிச்சி சோப்பு அலகு

தேங்காய் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட நூடுல்ஸ்களை பயன்படுத்தி "காதி ப்ராக்ரென்ஸ்" எனும் பெயரில் ரோஸ், லாவெண்டர், சந்தனம் மற்றும் செஞ் சந்தனம் எனும் 4 வகை நறுமணங்களில் புதியவகை குளியல் சோப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ரூ. 1404.03 இலட்சம் மதிப்பிலான சோப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 6.2 தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தொன்மை வாய்ந்த கிராமத் தொழில்கள் ஒன்றான தச்சு மற்றும் கருமாரத் தொழில் கிராமப்புற கைவினைஞர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது. ஐந்து தச்சு மற்றும் கருமார அலகுகள் கீழ்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

| வ.எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | வீரராகவபுரம் |
| 2. | இராணிப்பேட்டை | அரக்கோணம் |
| 3. | வேலூர் | பள்ளிகொண்டா |
| 4. | சிவகங்கை | கண்டனூர் |
| 5. | திருநெல்வேலி | பேட்டை |

மேற்காணும் அலகுகளில் அரசுத் துறைகள், நிறுவனங்கள், நீதிமன்றங்கள், இந்து சமய அறநிலையத்

துறை, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் மாவட்ட நூலகங்களுக்கு தேவையின் அடிப்படையில் மரம் மற்றும் இரும்பிலான தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

மட்பாண்ட தொழிலாளர்களின் உற்பத்தி திறனை அதிகரித்திட மாறுபட்ட வேகத்துடன் செயல்பட கூடிய 'சீலாவீல்' மின்சக்கரம் , அரக்கோணம் மற்றும் பள்ளி கொண்டா தச்சு கருமார அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அரசால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.745.34 இலட்சம் மதிப்பிலான மரம் மற்றும் இரும்பு தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.772.74 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் பல்வேறு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 6.3 காலணி அலகுகள்

வாரியத்தின் மிகவும் பழமை வாய்ந்த தொழில்களுள் காலணித் தொழிலும் ஒன்றாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 10 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

| வரிசை எண். | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | அம்பத்தூர் |
| 2. | சேலம் | சேலம் |
| 3. | ஈரோடு | சித்தோடு |
| 4. | திருப்பூர் | திருப்பூர் |
| 5. | கோயம்புத்தூர் | குப்பிச்சிபாளையம் |
| 6. | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 7. | சிவகங்கை | கண்டனூர் |
| 8. | நாமக்கல் | நாமக்கல் |
| 9. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 10. | கன்னியாகுமரி | நாகர்கோவில் |



**சேலம் காலணி உற்பத்தி அலகு**

அரசுத் துறைகளுக்கான கோப்பு பெட்டிகள், மருத்துவமனைகளுக்கான ரப்பரைஸ்டு காயர் மெத்தைகள், காலணிகள், நடத்துனர் பணப்பைகள், கையுறைகள் மற்றும் உள்ளாட்சி ஊழியர்களுக்கான

காலணிகள் ஆகியவைகள் இவ்வலகுகளில் சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் வாரியம் ரூ. 67.63 இலட்சத்திற்கு தோல் பொருட்களை உற்பத்தி செய்து ரூ. 42.72 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

### 6.4. தேனீ வளர்ப்பு

#### 6.4.1. காதி தேன்

தேனீ வளர்ப்புத் தொழில், கிராமத் தொழில்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. தேனீ வளர்ப்புத் தொழிலில் சுமார் 10,000 தேனீ விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பச்சைத் தேன் கிலோ 1–க்கு ரூ.140/– என்ற தரகு இல்லாத விலையில் தேனீ விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாரியத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்கான தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுவருகிறது.

கொள்முதல் செய்யப்பட்ட பச்சைத் தேன் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் உள்ள அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு தரம் பரிசோதிக்கப்பட்டு, "அக்மார்க்" சான்று பெற்று கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கண்கவரும் லேபிள்களுடன் கூடிய புதிய வடிவிலான கண்ணாடி பாட்டில்களில் "காதித் தேன்" மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அறிமுகப்படுத்தப்பட்டது.

2021−2022 ஆம் நிதி ஆண்டில் ரூ. 110.01 இலட்சம் மதிப்புள்ள பச்சைத் தேன் பதப்படுத்தப்பட்டு ரூ.137.00 இலட்சத்திற்கு தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 6.4.2. மதிப்புக் கூட்டிய தேன் பொருட்கள்

பொதுமக்கள் மத்தியில் "காதி தேன்" மிகவும் தூய்மையானதுடன், மருத்துவக்குணம் கொண்டதென பிரசித்தி பெற்றுள்ளது. மார்ச் 2022−ல் தேனுடன் ஆரோக்கியத்திற்கு உகந்த பொருட்களான அத்திப்பழம், பேரீட்சை, நெல்லி, வால்நட், மற்றும் உலர் பழங்கள் ஆகியவற்றை கொண்டு 400 கிராம் முதல் 450 கிராம் அளவுகளில் மதிப்புக்கூட்டிய தேனாக விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 6.5. கைமுறை காகித அலகுகள்

விழுப்புரம் மாவட்டத்தில் பிடாகம், கடலூர் மாவட்டத்தில் வடலூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோவனூர், ஈரோடு மாவட்டத்தில் செண்பகப்புதூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி ஆகிய 5 கைமுறை காகித அலகுகள் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்வலகுகளில் கச்சா அட்டைகள், கோப்பு அட்டைகள், பாண்டு தாள்கள், அலுவலக உறைகள்,

மேலுறைகள், எக்ஸ்ரே உறைகள், அட்டைப் பெட்டிகள் மற்றும் எழுது தாட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கச்சா அட்டைகள் மத்திய சிறைச்சாலைக்கும், எக்ஸ்ரே உறைகள் அரசு மருத்துவமனைகளுக்கும், அலுவலக உறைகள், கோப்பு அட்டைகள் மற்றும் மெல்லிய உறைகள் அரசு துறைகளுக்கும், பாண்ட் தாள்கள் நீதிமன்றங்களுக்கும் தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பபடுகிறது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் கைமுறை காகிதப் பொருட்கள் மார்ச் 2022 வரை உற்பத்தி ரூ. 36.60 இலட்சமும் விற்பனை ரூ. 27.89 இலட்சமும் எய்தப்பட்டுள்ளது.

## 6.6 இதர கிராமத் தொழில் அலகுகள்

### 6.6.1 வேடப்பட்டி ஜவ்வாது அலகு

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வேடப்பட்டியில் ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சாம்பிராணி, சந்தன மாலைகள், மூலிகை பற்பொடி, மெழுகுவர்த்திகள், கற்பூரம், பன்னீர் மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வலகில் உற்பத்தி செய்யப்படும் மூலிகை பற்பொடிகள் தமிழகத்தில் உள்ள மத்திய சிறைச்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சமீபத்தில் வாரியத்தால் "காதிப்ரெஷ்" (Khadi Fresh) எனும் பெயரில் கஸ்தூரி, மல்லிகை, லாவெண்டர், ரோஸ் மற்றும் சந்தனம் ஆகிய புதிய வகை நறுமணங்களை கொண்ட அகர்பத்திகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டு ரூ.32.94 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்து ரூ.28.17 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 6.6.2 நீலகிரி தைலம்

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள கூட்டுறவு சங்கத்தின் மூலம் பச்சைத் தைலம் கொள்முதல் செய்யப்பட்டு அதனை செங்கற்பட்டு மாவட்டம் மாமண்டூர் அலகில் பதப்படுத்தி நீலகிரி தைலம் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது.

நீலகிரி தைலம், மென்தால், கற்பூரம் மற்றும் இதர மூலப்பொருட்களைக் கொண்டு "சுகப்பிரியா" என்ற பெயரில் வலி நிவாரணி தைலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

2021-2022-ஆம் ஆண்டு ரூ.8.34 இலட்சம் மதிப்பிற்கு இவ்வலகுகளில் உற்பத்தி செய்து ரூ.6.45 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 6.6.3 கண்டனூர் ஷாம்பு அலகு

சிவகங்கை மாவட்டம் கண்டனூரில் "சாரல்" ஷாம்பு, "வைகை" கைகழுவும் திரவம் மற்றும் "எழில்" குளியல் திரவம் ஆகிய சிறப்பு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

2021–2022–ம் ஆண்டு ரூ.3.64 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.5.18 இலட்சம் மதிப்பிலானவைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 6.6.4. மரச்செக்கு எண்ணெய்

பொதுமக்கள் தற்போது பராம்பரியமிக்க இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பயன்படுத்திட மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆதலால், வாரியத்தால் பாரம்பரியமிக்க மரச் செக்குகளினால் மக்களின் உடல் நலனுக்கு நல்லதான எண்ணெய் வகைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்பொருட்டு சென்னை குறளகம் தரைத்தளத்தில் இரண்டு வாகைமரச் செக்குகளை அமைத்து எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை மற்றும் எள் போன்றவற்றை கொள்முதல் செய்து மரச்செக்குகளினால் தரமான கடலெண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இவைகள் "காதி நியூலைப்" (Khadi New life) எனும் பெயரில் 23.03.2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களால் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




**சென்னை குறளகம் மரச்செக்கு எண்ணெய் உற்பத்தி பிரிவு**

**7. கண்டனூர் கதர் வளாகம் புதுப்பித்தல்**

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கண்டனூர் கிராமத்தில் உள்ள கதர் வளாகம் ரூ.45.80 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்து அதனில் கதர் நூற்பு நிலையம், கதர் துணி உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி அலகு, தச்சுக் கருமாரப் பொருட்கள் உற்பத்தி அலகு, சோப்பலகு, பனை ஓலைப் பொருட்கள் அலகு,

கால் மிதியடிகள் அலகு, கூடை முடைதல் அலகு மற்றும் எம்ப்ராய்டரி பொருட்கள் அலகு எனும் 9 அலகுகள் 02.10.2021 முதல் துவக்கி வைக்கப்பட்டு செயல்பாட்டிலுள்ளது.

நூற்பு பணி தெரியாத 60 பெண்களுக்கு மாதம் 20 நபர்கள் வீதம் ஒரு மாதகால பயிற்சி அளிக்கப்பட்டு இப்பயிற்சியாளர்களுக்கு பயிற்சி முடிவுற்றதும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

## 8. வணிகம்

### 8.1. கதர் அங்காடி விற்பனை நிலையங்கள்

வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்களை சந்தைப்படுத்திட "காதி கிராப்ட்" விற்பனை அங்காடிகள் சென்னை குறளக கட்டடம் மற்றும் பிற மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.



**பாரம்பரிய அரிசி மற்றும் அகர்பத்திகள்.**

**8.2. கதரங்காடிப் பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி திட்டம்.**

கதர் அங்காடியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வாரிய பணியில் அனுபவமிருந்தாலும், தற்போதைய சூழ்நிலையில் இன்முகத்துடன் வாடிக்கையாளர்களை அணுகுதல், புதிய நடைமுறை வியாபார யுக்தியினை கடைபிடித்தல், கணினி மயமான சூழ்நிலையில் கணக்கு வழக்குகளை பராமரிக்கவும் பணியாளர்களுக்கு முறையான புத்தாக்கப் பயிற்சி 03.01.2022 மற்றும் 20.01.2022 ஆகிய நாட்களில் வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் போது வாரியத்தால் தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய கதர் பட்டு ரகங்கள், சோப்பு வகைகள், தேன் வகைகள் போன்றவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

### 8.3. இணைய வழி விற்பனை

இணைய வழியில் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு ஏற்கனவே www.tnkhadi.org மற்றும் www.tnkhadi.com எனும் இரு இணையதளங்கள் உருவாக்கப்பட்டு இருப்பினும் குறிப்பாக இளைய தலைமுறைகளை கவரும் வகையில் ஆன்ட்ராய்டு மற்றும் IOS வழியில் செயல்படும் "tnkhadi" எனும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

இணையவழியாக 23.10.2021 முதல் மார்ச் 2022 வரை ரூ.2.86 இலட்சம் மதிப்பிலான காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்கள் விற்பனை எய்தப்பட்டுள்ளது.

### 8.4.மின் வணிகத் (e–Commerce) தளங்கள் மூலம் விற்பனை

அமேசான் (Amazon), பிளிப்கார்ட் (Flipkart), ஸ்விக்கி (Swiggy) போன்ற மின் வணிகத் (e–Commerce) தளங்கள் வாயிலாக காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### 8.5. தனி உரிமைக் கிளைகள் (Franchise)

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்களை பெருமளவில் மக்களுக்கு கொண்டு சென்று வாரியத்தின்

விற்பனையை அதிகரிக்கச் செய்திடும் பொருட்டு தனி உரிமைக் கிளைகளை (Franchise) நடத்துவதற்கான உரிமம் வழங்கப்படுகிறது.

தற்போது செயல்படும் கிளைகளின் விபரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | திருப்பெரும்புதூர் |
| 2. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 3. | நாமக்கல் | கொல்லிமலை |
| 4. | கன்னியாகுமரி | சுசீந்திரம் |

இக்கிளைகளின் மூலம் 2021–2022–ம் ஆண்டில் ரூ. 3.45 இலட்சம் விற்பனை எய்தப்பட்டுள்ளது.

## 8.6. மொத்த விற்பனை முகவர்கள் நியமனம்

வாரியத்தின் தயாரிப்புகளுக்கு பெரிய அளவிலான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், மூலை முடுக்குகளில் கூட காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்கள் கிடைக்கும் வகையில் பரந்த வணிக கட்டமைப்பை உருவாக்குவதற்கும், மொத்த விற்பனை முகவர்களை நியமித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகாறும் 11 மொத்த விற்பனை முகவர்கள் கண்டறியப்பட்டு, விற்பனை முகவர்களுக்கான அங்கீகாரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

### 8.7 கண்காட்சி மற்றும் விற்பனை

அரசு அலுவலக வளாகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் விற்பனைக் கண்காட்சி அமைத்து, கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்களை பிரபலப்படுத்தி விற்பனை செய்திட சிறப்புக்கவனம் அளிக்கப்படுகிறது. 2021–2022–ம் ஆண்டில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு ரூ.26.95 இலட்சம் விற்பனை எய்தப்பட்டுள்ளது. வருடாந்திர நவராத்திரி பண்டிகை காலத்தில் சென்னை குறளக கதரங்காடியில் நடைபெறும் கொலு பொம்மை விற்பனை மற்றும் கண்காட்சி பிரபலமானதாகும். கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய மற்றும் நிகழ்கால காகித கூழ் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கு இக்கண்காட்சி உகந்த தளமாகத் திகழ்கிறது.

2021–2022–ம் ஆண்டில் பொம்மைகள் ரூ.85.96 இலட்சத்திற்கு விற்பனை எய்தப்பட்டுள்ளது.

### 8.8. குறும் படங்கள் வழியாக விளம்பரம்

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்கள் சிறப்புகள் மற்றும் மகத்துவத்தை பெற்றுள்ளதாக

இருப்பினும் அவற்றினை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இதுவரையிலும் விளம்பரங்கள் ஏதும் செய்யப்படவில்லை. ஆதலால் ஆதிரைபட்டு, காதி ப்ராக்ரென்ஸ் சோப்புகள், காதி தேன், பதநீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை வெல்லம் கலந்த சுக்கு காபி பவுடர் ஆகியவற்றின் குறும் விளம்பர படங்களை பிரபலமான கலைஞர்களைக் கொண்டு சிறப்பான பாடல் மற்றும் கருத்தினை கொண்டு தயாரித்து தொலைக்காட்சி சேனல்களிலும், திரையரங்குகளிலும், அரசு விளம்பர LED வாகனங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

### 8.9. சமூக ஊடகங்கள் வழியாக விளம்பரம்


கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்களை விளம்பரப்படுத்தும் நோக்கிலும் விற்பனையை அதிகரிக்கும் நோக்கிலும் இளைஞர்களை கவரும் நோக்கிலும் சமூக ஊடகத்தளங்களான YouTube, Instagram, Twitter மற்றும் Facebook ஆகியவற்றில் விளம்பரப்படங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

### 8.10. பாரம்பரிய அரிசி வகைகள் விற்பனை

பாரம்பரிய தானிய வகைகளின் மருத்துவ பயன்களை கருத்தில் கொண்டும் பொது மக்களிடையே இதன் பயன்பாட்டினை பிரபலப்படுத்தும் வகையிலும் பாரம்பரிய அரிசி வகைகளான மாப்பிள்ளை சம்பா, கவுனி,

இரத்த சாலி, தூயமல்லி, பூங்கார் மற்றும் சீரகச் சம்பா ஆகியவைகளை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 23.03.2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களால் "காதி பாரம்பரியம்" (Khadi Traditional) எனும் பெயரில் 1/2 கிகி மற்றும் 1 கிகி அளவு பவுச்சுகளில் (Pouch) விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## புதிய அறிமுகம்



## வணிகம்




## 9. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்களை மேற்கொள்ளும் 164 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனில் சுமார் 3500 உறுப்பினர்களைக் கொண்டு 34 மண்பாண்ட கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் அவர்கள் செயற் பதிவாளராக செயல்பட்டு வருகிறார்.

மேற்படி, கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு மற்றும் பிற செலவின விவரங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.1518.83 இலட்சத்திற்கு உற்பத்தி செய்தும் ரூ. 2084.32 இலட்சத்திற்கு விற்பனையும் எய்தப்பட்டுள்ளது.

## 10. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

"பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்" 2008-2009 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு தொழில்கள் மற்றும் வணிகத் துறை, மும்பை கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு மற்றும் கயிறு வாரியம் ஆகியவற்றின் மூலம் ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சகத்தின் கீழ் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது 01.07.2016 முதல் வெற்றிகரமாக இணைய வழி வாயிலாக நடைமுறைப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 10.1.திட்ட விவரங்கள்

உற்பத்தி பணியில் ஈடுபடும் பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டின்படி அதிகபட்சமாக ரூபாய் 25 இலட்சமும், சேவைப் பிரிவில் ஈடுபடும் பயனாளிகளுக்கு

அதிகபட்சமாக ரூபாய் 10 இலட்சமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர் உற்பத்திப் பிரிவின்கீழ் ரூபாய் 10 இலட்சத்திற்கு மேலும், சேவைப் பிரிவின்கீழ் ரூபாய் 5 இலட்சத்திற்கு மேலும் பெறும் வங்கி கடன்களுக்கு, பயனாளிகளின் கல்வித் தகுதியாக குறைந்தபட்சம் 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கும் முறைகள் கீழ்வருமாறு:


| பயனாளிகள் பிரிவு | மானியம் வரம்பு (திட்ட மதிப்பீட்டில்) | |
|---|---|---|
| இடம் | நகர்ப்புறம் | கிராமப்புறம் |
| பொதுப் பிரிவு | 15% | 25% |
| சிறப்புப் பிரிவினர் (பட்டியல் இனத்தோர் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத் திறனாளிகள் / வடகிழக்கு மலை மற்றும் எல்லைப்புற பகுதியினர்) | 25% | 35% |

## சொந்த முதலீடு

| பயனாளிகள் பிரிவு | சொந்த முதலீடு |
|---|---|
| பொதுப் பிரிவு | 10% |
| சிறப்புப் பிரிவினர் (பட்டியல் இனத்தோர் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளிகள் / வடகிழக்கு மலை மற்றும் எல்லைப்புற பகுதியினர்) | 5% |


### 10.2. சாதனைகள் (PMEGP)


2019–2020 ஆம் ஆண்டு முதல் 2021–2022 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மூலம் விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விபரங்கள் பின்வருமாறு:–






## 11. கதர் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஒட்டு மொத்தமாக எய்தப்பட்ட வெவ்வேறு பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:–


2020-2021 உற்பத்தி - ரூ.2728.45 இலட்சம்
கதர்
சோப்பு
தச்சு மற்றும் கருமாரத் தொழில்
தோல்
கைமுறைக் காகிதம்
தேனீ வளர்ப்பு
இதர தொழில்கள்


2020-2021 விற்பனை - ரூ.3864.94 இலட்சம்
கதர்
சோப்பு
தச்சு மற்றும் கருமாரத் தொழில்
தோல்
கைமுறைக் காகிதம்
தேனீ வளர்ப்பு
இதர தொழில்கள்


2021-2022 உற்பத்தி ரூ.3077.57 இலட்சம்
கதர்
சோப்பு
தச்சு மற்றும் கருமாரத் தொழில்
தோல்
கைமுறைக் காகிதம்
தேனீ வளர்ப்பு
இதர தொழில்கள்


2021-2022 விற்பனை - ரூ.4619.07 இலட்சம்
கதர்
சோப்பு
தச்சு மற்றும் கருமாரத் தொழில்
தோல்
கைமுறைக் காகிதம்
தேனீ வளர்ப்பு
இதர தொழில்கள்

| வ. எண் | தொழில் | 2020–2021 (ரூ. இலட்சத்தில்) | | 2021–2022 (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 688.76 | 1837.23 | 716.92 | 2108.93 |
| 2. | கிராமத் தொழில்கள் | | | | |
| | அ. சோப்பு | 995.53 | 999.12 | 1356.15 | 1404.03 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரம் | 772.92 | 633.89 | 745.34 | 772.74 |
| | இ. தோல் | 72.69 | 57.21 | 67.63 | 42.72 |
| | ஈ. கைமுறைக் காகிதம் | 36.07 | 34.32 | 36.60 | 27.89 |
| | உ. தேனீ வளர்ப்பு | 93.88 | 143.93 | 110.01 | 137.00 |
| | ஊ. இதர தொழில்கள் | 68.60 | 159.24 | 44.92 | 125.76 |
| | கூடுதல் | 2728.45 | 3864.94 | 3077.57 | 4619.07 |

## 12. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பணி ஓய்வு பெற்றோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிடவும் கதர் இரகங்களுக்கு தள்ளுபடி மானியம் வழங்கிடவும் தேவையான நிதியுதவியை மாநில அரசு ஒப்பளித்து வருகிறது.

2022–2023–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய நிதியுதவி விவரம்:–

| வ. எண் | விபரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வு பெற்றோர்களுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்கான மானியம். | | 7500.00 |
| 2. | தள்ளுபடி | கதர் வாரியம் | 400.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 2200.00 |
| 3. | தணிக்கைக் கட்டணம் | | 513.64 |
| 4. | கிராமத் தொழில் மேம்பாட்டிற்கு உதவி | | 0.01 |
| 5 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 6. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை | | 584.35 |
| 7. | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| 8. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு 'சீலா' மின் சக்கரங்கள் வழங்குதல் | | 0.01 |
| | மொத்தம் | | 11198.03 |

# தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

## 1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் பனைத் தொழிலை மேம்படுத்திட 720 ஆரம்பபனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட அளவில் 8 மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவைகள் செயல்படுகின்றன. பனை பொருட்களை உற்பத்தி செய்திட தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய நிதி உதவி அளித்தல், உற்பத்தி செய்த பனைப் பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் பனைத் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகப்படுத்துவது ஆகியவைகளை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

## 2. நிருவாகம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு ஏதுமில்லை. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணியாளர்கள் அனைவரும் தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்) உட்பட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பிலிருந்து

அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப பனைவெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவுசங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்லம் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு செயற்பதிவாளர் ஆவார்.

**3. பதநீரை இறக்குவதற்கான உரிமம்**

பதநீரை தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் பதநீர் இறக்கவும், அதை விற்பனை செய்யவும் பதநீர் இறக்குபவர்களுக்கு அதற்கான உரிமம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது அவ்வாணையின் படி ஒவ்வொரு நிதியாண்டிலும் பதநீர் இறக்குபவர்களுக்கு தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தினால் உரிமம் புதுப்பித்து வழங்கப்படுகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில் அந்தந்த மாவட்டங்களின் கதர் கிராமத் தொழில்கள், உதவி இயக்குநர்களால் 10,126 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**4. சிறப்பு திட்டங்கள்**

மாநில அரசால் ஏழை பனை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட அனைத்து உதவிகளையும்

தொடர்ந்து வழங்குவதோடு உண்ணும் மற்றும் உண்ணாப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களையும் வழங்கி வருகிறது.

### 4.1. பொது பயன்பாட்டு மையம்

தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டிய பட்டிணத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் தொழிற்கூடம் அமைத்து, தேவையான இயந்திரங்களை கொள்முதல் செய்து தரமான பனை வெல்லம் உற்பத்தி செய்வதற்கான பொது பயன்பாட்டு மையம் அமைத்திடும் பணிகள் நடைபெற்றுவருகிறது.

### 4.2. பனைவெல்லம் உற்பத்திக்கான புதிய கட்டடம்

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் உற்பத்தி திறனை அதிகரித்திட ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கடலூர் மாவட்டத்திலுள்ள மண்டல பனைபொருள் பயிற்சி நிலையத்தில் பனை வெல்லம் உற்பத்தி அலகிற்கான புதிய கட்டிடங்கள் கட்டப்படவுள்ளது.

### 4.3. பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சி திட்டம்

ஐந்து குழுக்களைக் கொண்ட (1 குழு/50) 250 நபர்களுக்கு தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியும், பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ.50 இலட்சம்

செலவில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

## 4.4. கற்பகம் மற்றும் கரும்பனை என்ற பெயரில் பனை வெல்லம் விற்பனை

2021–2022–ஆம் நிதியாண்டில் 100 கிராம், 250 கிராம் மற்றும் 500 கிராம் அளவுகளில் 32.50 மெட்ரிக் டன் பனை வெல்லம் பொது விநியோகத் திட்டக் கடைகளுக்கு "கற்பகம்" என்ற பெயரிலும் பல்பொருள் சிறப்பு அங்காடிகளுக்கு "கரும்பனை" என்ற பெயரிலும் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தால் விற்பனை செய்யப்படுவதுடன் பொதுமக்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

**கற்பகம்**




**கரும்பனை**



## 5. வணிகம்

உண்ணும் மற்றும் உண்ணா பனைப் பொருட்கள் கதர் அங்காடிகள், பாம் கிராப்ட் (Palm Craft) கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கிவரும் நியாயவிலைக் கடைகள் / கூட்டுறவு மொத்த விற்பனைக் கடைகள் / தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

### 5.1. பதநீர்

பனை பொருட்களுக்கு அடிப்படையானது பதநீர் ஆகும். பனைவெல்லம் (கருப்பட்டி), பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை, பனங்கற்கண்டு மிட்டாய், பனை சாக்லேட் போன்ற பல்வேறு பனை உணவுப் பொருட்கள் பதநீரை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிக எண்ணிக்கையிலான பனைமரங்களிலிருந்து பருவகாலத்தில் இறக்கப்படும் இயற்கை பானமான பதநீர் மக்கள் விரும்பி அருந்தக் கூடிய பிரபலமான பானமாகும்.







2021–2022 நிதியாண்டில் உண்ணத்தக்க பனை பொருட்கள் உற்பத்தி செய்திட பதநீர் இறக்குபவர்களிடமிருந்து 5 இலட்சம் லிட்டர் பதநீர் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

## 5.2. பனை பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை

இயற்கை பானங்கள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்பது வகையான மூலிகைப் பொருட்கள் மற்றும் பனைவெல்லம் கலந்து தயாரிக்கப்படும் சுக்கு காபி பனை வாரியத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் பல்வேறு பிரதான இடங்களான சென்னை பெருநகர் மெரினா கடற்கரை, குறளகம், மெட்ரோ இரயில் நிலையம் அருகில், கோயம்பேடு புறநகர்

பேருந்து முனையம், தீவுத்திடல் போன்ற பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.




மேலும், சேலம், ஏற்காடு, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, திருநெல்வேலியில் உள்ள பாளையம்கோட்டை, ஊட்டி, இராமநாதபுரத்தில் உள்ள ஏ.பி.ஜே.அப்துல்கலாம் நினைவிடம் மற்றும் திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலப்பாதையில் சுக்குகாபி, கதர் கிராமத் தொழில் பொருட்கள் மற்றும் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பல்வேறு வகையான பனை பொருட்களை விற்பனை செய்திட ஒரு பனைபொருள் விற்பனை நிலையம் சென்னை குறளகம் தரைதளத்தில் செயல்பட்டு வருகிறது.

## 5.3. பனை ஓலைப் பொருட்கள்

பனையிலிருந்து உண்ணாப் பொருட்களான பனந்தும்பு தூரிகைகள், அழகுமிகு பனை ஓலைப் பொருட்களான விசிறிகள், பாய்கள், கூடைகள், மற்றும் பல்வேறு வகையான இயற்கையான வண்ணம் பூசப்பட்ட மற்றும் வண்ணம் பூசப்படாத பனந்தண்டு பொம்மைகள் போன்றவை தயாரிக்கப்படுகிறது.






## 6. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

கடந்த மூன்று ஆண்டுகளில் பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ்க்காணும் விளக்கப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)




**ஆர். காந்தி**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**

# பட்டுவளர்ச்சித் துறை




சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு
பட்டுக்கூட்டினால் செய்யப்பட்ட கைவினைப்பொருள் நினைவுப் பரிசு
மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை
அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது










மாநில அளவிலான சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது









மாநில அளவிலான சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்களுக்கு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது







மாநில அளவிலான சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது









மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பட்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது







மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் கிருட்டினகிரியில் அமைந்துள்ள அரசு வித்தகத்தின் நடவடிக்கைகள் மேற்பார்வையிடப்பட்டது







மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை
அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை
அமைச்சர் அவர்களால் ஒசூர் அரசு பட்டுப்பண்ணையில் புதிதாக
இளம்புழுவளர்ப்பு மையம் துவங்கி வைக்கப்பட்டது

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.